Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 27 செவ்வாய்க்கிழமை (10.05.2011) பக்கங்கள் 12 ஓசை – 223

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA
C/704
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

## அரசின் நற்பணிகள் ஐ.நா.வுக்கு புரியவில்லை

### சினம் கொள்கிறார் கோத்தபாய

(கொழும்பு)

சமாதானத்தையும், புரிந்துணர் வினையும் மேம்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட நற்பணிகளை கவனத்திற்கு கொள்ள தருஸ்மன் அறிக்கை தவறியுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஏசியன் ட்ரிபியூனுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து 12 மாத காலப் பகுதியினுள், இடம்பெயர்ந்த நிலையில் இருந்த 3 லட்சத்து 50 ஆயிரம் பேரை மீள குடியமர்த்திய நடவடிக்கைகள், ஐக்கிய (12ஆம் பக்கம் பார்க்க)

## புத்திசாதுரியமற்ற யோசனைகள்; ஐ.நா. அறிக்கைக்கு பிரதமர் பதிலடி

(கொழும்பு)

முப்பது வருட காலம் நடந்த யுத்தத்தின் போது நாம் இழந்த இலட்சக் கணக்கான உடைமைகள் மற்றும் உயிர்கள் பற்றி ஒரு வசனம் கூடத் தெரிவிக்காமல், இறுதிநேர யுத்தத்தில் நடந்ததாகக் கூறப்படும் ஐந்து உரிமை மீறல்கள் மற்றும் மட்டுமான விடயங்களைப் பற்றி விசாரணை நடத்தக் கோரும் ஐ.நா. நிபுணர் குழுவின் யோசனை புத்தி சாதுர்யமான ஒன்றல்ல என்று பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

கொழும்பு - பொக்காவலை என்ற இடத்தில் உள்ள பௌத்த விகாரையில் இடம்பெற்ற சமய நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முப்பது வருடங்கள் எமது நாடு பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தது. சிங்கள மன்னர்கள் நாட்டைக் காத்தது போல பல்வேறு சிரமங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் மத்தியில் எமது நாட்டை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் பாதுகாத்து சுதந்திர (12ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாடுகளால் தரமுடியாததை இன்று நாங்கள் தந்துள்ளோம்

### மாவிட்டபுரத்தில் பசில் ராஜபக்ஷ



இணைந்த கரங்களின் உயர்ந்த பணி...

(யாழ்ப்பாணம்)

**வெளிநாடுகளால் திணிக்கப்பட்ட எந்தவொரு ஒப்பந்தமோ சமாதான உடன்படிக்கைகளோ உங்க ளுக்குப் பெற்றுத்தராத உங்களது சொந்த நிலங்களை சமாதானத்தின் மூலம் நாம் பெற்றுத் தந்தி ருக்கின்றோம். இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நேற்று மாலை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்றலில் இடம்பெற்ற தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் ஒன்பது கிராம சேவையாளர் பிரிவுகளில் 3,511 குடும்பங்களைச் சேர்ந்த 12,274 பேரை மீள் குடியேற்றும் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் இடம்பெற்ற இப் பொதுக் கூட்டத்தில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், பிச்சைக்காரனுக்கு புண் இருந்தால்தான் அவனால் பிச்சை எடுத்து பிழைப்பு நடத்த முடியும். எனவே, தொடர்ந்தும் உங்களைப் பிரச்சினைகளுக்குத் தள்ளிவிட்டால்தான் இந்த சுயலாப தீய சக்திகளால் தங்களது அரசியல் பிழைப்பை நடத்த முடியும் என்பதால், தொடர்ந்தும் உங்களுக்கு பிரச்சினைகளை உண்டு பண்ணி வருகின்றனர். மக்கள் பிரச்சினைகளில் இருந்து மீள்வதை இவர்கள் விரும்பப் போவதில்லை.

இடம்பெயர்ந்த நிலையிலுள்ள அனைத்து மக்களையும் மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை நாம் எப்போதோ செய்து முடித்திருக்க வேண்டும். ஜனாதிபதியின் விருப்பமும் அதுவாகும். என்றாலும் , மீள் குடியேற்ற நடவடிக்கைகள் தாமதித்து வருவதற்கு தமிழ் மக்களாகிய உங்களுடன் இருக்கின்ற ஒருசில சதிகாரர்களே காரணம்.

. கடந்தகால யுத்த சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்களைத் தவிர, ஏனைய இழப்புக்கள் அனைத்தையும் பெற்றுக் கொடுக்கும்படி ஜனாதிபதி அவர்கள் பணித்துள்ளார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் மீளக்குடியேறுகின்ற அனைத்து மக்களுக்கும் தேவையான அனைத்து வசதிகளையும் நான் செய்து கொடுப்பேன் என்பதை இங்கு வலியுறுத்திக் கூறுகின்றேன். இன்றையதினம் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு மீளக்குடியேறுகின்ற அப்பாவி மக்களாகிய உங்களிடமும், இங்குள்ள ஏனைய மக்களிடமும் நான் ஒன்றைக் கேட்டுக் கொள்கின்றேன். அதாவது (11ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை மாணவர்கள் இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் யாழ். குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். குற்றத் தடுப்பு பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் விக்கிரம ஆராச்சி தெரிவித்தார்.


புதிய மாணவர்களை வரவேற்பதற்கான ஆரம்ப வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவர்களிடையே கடந்த சனிக்கிழமை மோதல் ஏற்பட்டது. இம்மோதல் மீண்டும் ஏற்படாத வண்ணம் பொலிஸார் பல்கலைக்கழகத்துக்குள் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் பல்கலைக்கழக வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகளை எடுத்துச் சென்றதாகவும், இவற்றைப் பெறுவதற்கு பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோது கலைப்பீட மற்றும் வணிக முகாமைத்துவ பீட மாணவர்கள் இருவர் பொலிஸாரல் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழகச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார்கள் என்ற சந்தேகத்திலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக உப பொலிஸ் பரிசோதகர் விக்கிரம ஆராச்சி தெரிவித் தார். இவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## மொழிப் பிரச்சினையைத் தீர்க்க யாழ்.செயலகத்தில் கூட்டம்

### அமைச்சர் வாசுதேவ பிரதம அதிதி



(கொழும்பு)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளதாக யாழ். மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள மொழி சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாகவே இவரது விஜயம் அமையும் என்று யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். வருகை தரும் அமைச்சர் யாழ். மாவட்டச் செயலகத்தில் மொழியியல் சார்ந்த அரச அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

# சுகயீனம் காரணமாக கடை பூட்டினாலும் வாடகைப் பணம் செலுத்தியே தீரவேண்டும்

## கிளி.மாவட்ட வர்த்தகர் ஆதங்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பிரதேச சபையால் நிர்வகிக்கப்படும் சந்தையிலுள்ள வர்த்தக உரிமையாளர்கள் சுகவீனம் காரணமாகத் தமது நிலையங்களைத் திறக்காதுவிட்டாலும் அந்த நாளுக்குரிய வாடகைப்பணத்தைச் செலுத்தவேண்டிய நிலை காணப்படுவதாக வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த சந்தைப் பகுதியிலுள்ள வர்த்தகர்கள் தவிர்க்க முடியாத நிலையில் கடையைத் திறக்காது விட்டால் அதற்குப் பணம் செலுத்தவேண்டியுள்ளது. இது தொடர்பாகத் தெரிவிப்பதற்கு சந்தையிலுள்ள அலுவலகத்தில் அதிகாரிகள் இல்லை. இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதைவிட பணத்தை வசூலிப்பவர்களிடம் தெரிவித்தால் அவர்களும் அதிகாரிகளிடம் கதைக்குமாறு கூறுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

உரிய அதிகாரிகள் களத்தில் இருந்து செயற்படாமையால் தமது பிரச்சினைகளைத் தெரிவிப்பதில் சிக்கல் நிலை காணப்படுவதாக அவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

இதைவிட முக்கியமாக சுகவீனம் காரணமாக வர்தக நிலையத்தைத் திறக்காது விட்டாலும் வாடகைப் பணம் செலுத்துவது மிகவும் கஷ்டமாக உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இப்பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியும் தொடர்ந்தும் பணம் வசூலிக்கப்படுவதாகவும் இதனால் நாளொன்றுக்கு அறவிடப்படும் பணம் பிரதேச சபையின் வருவாயாக 20ஆயிரம் ரூபா நிதி கிடைப்பதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே தமது பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (28)

# சேமலாபநிதி எப்போது?

## ஊழியர்கள் அங்கலாய்ப்பு

(கரணவாய்)

தேசிய உப்புக்கூட்டுத்தாபனத்தில் வேலை செய்தவர்களுக்கான சம்பளம் அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்நிலையில் சம்பளத்தில் இருந்து கழிக்கப்படும் சம்பள உதவுதொகை (E.P.F) இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை என பணியாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இக் கொடுப்பனவின்றி தாம் பெரும் இன்னல்களுக்கு உள்ளாவதாக ஓய்வு பெற்ற பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து தமக்குரிய பணத்தினைப் பெற்றுக்கொடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர் (18)

# மின்சார விநியோகம் விரைவில் வழமைக்கு

(யாழ்ப்பாணம்)

வரும் ஆறுமாத காலப் பகுதிக்குள் கொழும்புமாநகரம் போன்று யாழ்.மாநகருக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக யாழ்.மின் அத்தியட்சகர் ஒ.அருள்நாதன் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது யாழ்.நகர்ப் பகுதியில் அடிக்கடி மின்வெட்டு நடைபெற்று வருகின்றது. இதனையிட்டு மின்பாவனையாளர்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதனை ஏற்றுக் கொண்ட அவர் தம்மால் உற்பத்தி செய்யப்படும் மின் உற்பத்தி யாழ்.குடா நாட்டிற்கு போதுமானதாக இல்லை எனவும் தற்போது 89 மெகாவாற் மின் உற்பத்தியே மேற்கொள்ளப்படுகின்றது. எனவும் தெரிவித்த அவர் இதனை மேலும் 30 மெகாவாற்றாக அதிகரிக்க எண்ணியுள்ளோம் இதற்கென பொறியிலாளர்கள் குழு ஒன்று கொழும்பில் கூடி நடவடிக்கை எடுத்துவருகின்றது. இன்னமும் 6 மாதத்திற்குள் கொழும்பு போல் மின்சார விநியோகம் யாழ்.நகரத்திற்கும் கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

மேலும் தற்சமயம் யாழ். நகரில் பொருத்தப்பட்டிருக்கும் மின் விளக்குகளும் இவ் வாறு மின் பற்றாக்குறையினாலேயே பழுதடைந்து விடுவதாகவும் குறிப்பிட்டார். (பா)

# கிளிநொச்சி பேருந்து நிலையம் புதிதாக அமைக்க கோரிக்கை

(முரசுமோட்டை)

கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சி.பி.ரத்னாயக்க கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தனியார் பேருந்து நிலையத்தைப் பார்வையிட்டார்.

இதன்போது இங்குள்ள நிலைமைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார். இதன்போது அதிகாரிகள் தெரிவிக்கையில், கிளிநொச்சி நகருக்கான பேருந்து தரிப்பிடத்திற்குச் சரியான இடம் இதுவரை ஒதுக்கப்படாமையால் கிளிநொச்சி நகருக்கான தனியார் பேருந்து நிலையம் பழைய பொதுச் சந்தைக்கு அருகிலேயே தற்போது இயங்கிவருகிறது.

இதைவிட அரச பேருந்துகளும் கிளிநொச்சி டிப்போ அமையவுள்ள கனகபுரம் வீதியிலேயே நிறுத்தப்படுகிறது. நிரந்தர 10 பேருந்து நிலையம் ஒன்று கிளிநொச்சியில் அமைக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, அமைச்சர் கிளிநொச்சியில் தற்போது இயங்கிவரும் பேருந்து நிலையத்தைப் பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (110)

# மீள்குடியேறிய மக்களுடன் வாழ்வாதாரம் தொடர்பான சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை உதயபுரம் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன் மற்றும் நல்லூர் பிரதேசசபை செயலர் மேரி சாந்த சீலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த கலந்துரையாடலில் குறித்த பகுதியில் மீள்குடியேறிய மக்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு உதயபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் கேட்டுள்ளது.

# ஆலயம் புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

பூநகரி மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலயத்துக்கான கட்டடப் புனர்நிர்மான வேலைகள தற்போது நடைபெற்றுவருகின்றது.

பாசையூர் மக்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான இவ்வாலயம் கடந்த யுத்த அனர்தங்களினால் மிகவும் சேதமுற்ற நிலையில் காணப்பட்டது. அத்துடன் இங்கு இருந்த அழகிய தேர், மற்றும் சொரூபங்கள் அனைத்தும் உடைந்து வெறுமனே கட்டடத்தின் அடித்தளம் மட்டும் எஞ்சிய நிலையில் காணப்பட்டது.

இதனால் பாசையூர் மக்களின் நிதியுதவியுடன் இவ்வாலயத்துக்கான கட்டடம் அமைப்பதற்கு முற்றாக ஆலயம் இடிக்கப்பட்டு யாழ்.மறைமாவட்ட நிதியாளர் அருட்தந்தை அன்ரனிதாஸ் அடிகளாரினால் அடிக்கல் நாட்டப்பட்டது.

கடற்றொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களின் சரீர உதவியுடன் தற்போது ஆலய வேலைகள் நடைபெற்றுக் வருகின்றது.

எதிர்வரும் ஆவணி மாதத்தில் வரும் கடைசி ஞாயிற்றுக் கிழமை புனித செபஸ்தியாரின் திருவிழா நடைபெறவுள்ளதால் இவ் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுவருகின்றது.

அத்துடன் மற்றொரு யாத்திரைத் தலங்களில் ஒன்றான மண்டைக்கல்லாறு புனித அந்தோனியார் ஆலயமும் கடுமையான கடலரிப்பினால் மிகவும் சேதமுற்ற நிலையில் காணப்படுவதுடன், உடனடியாக அதனை சீர்செய்வதற்கு ஆலய நிர்வாகம் முடிவெடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (21)

# இசை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் ஆலய திருமண மண்டபத் திருப்பணி நிதிக்காக ஐங்கரனின் இசைமாலை என்னும் இறுவெட்டு நாளை காலை 9.30 மணிக்கு ஆலய முன்றலில் வெளியிடப்படவுள்ளதாகவும் இந் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# கரைச்சியில் கூரைத்தகடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலிருந்து பின்னர் உறவினர் வீடுகளில் தங்கியிருந்து தற்போது மீள் குடியேறியுள்ள மக்களுக்கு இந்திய அரசாங்கத்தின நிதியுதவியின் மூலம் கூரைத்தகடுகள் விநியோகிக் கப்பட்டு வருகிறது. இதில் கரைச்சிப் பிரதேச கிராமங்களுக்கே இக்கூரைத தகடுகள் வழங்கப்பட்டிருக்கிறது. (28)

# பாலங்கள் புனரமைப்புப் பணி துரிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் உள்ள பாலங்கள் திருத்தும் பணி துரித கதியில் இடம்பெற்று வருகின்றது.

வீதி அகலிப்புக்கு ஏதுவான வகையில் இந்தப் பாலங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றது. பருத்தித்துறையில் இருந்து கோப்பாய் பிரதேச செயலகம் வரை வீதி அகலிப்புப் பணி பூர்த்தியாகியுள்ள நிலையில் மிகுதியாக உள்ள வீதியும் புனரமைக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதனால் இந்த வீதியில் உள்ள பாலங்கள் துரித கதியில் புனரமைப்புச் செய்யப் பட்டுவருகின்றது. பாலத்திருத்த வேலைகள் பூர்த்தியானவுடன் வீதி அகலிப்புப் பணி தொடரும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் இடமாற்றம் தொடர்பான நேர்முகப்பரீட்சை 9.5.2011 மாலை 3 மணிக்கு நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணத்தினால் இந்நேர்முகப் பரீட்சை இன்று காலை 11 மணியளவில் நடைபெறுமென வடமாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

# திறப்புவிழா பிற்போடல்

(பருத்தித்துறை)

இன்று நடைபெறவிருந்த நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் புதிய கலையரங்கின் திறப்புவிழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா அறிவித்துள்ளார்.

# இணைந்த கணிதம் விசேட பரீட்சை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரப் பரீட்சை 2011 இல் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இணைந்த கணித பாடத்திட்டத்தில் இரண்டாவது கட்டப் பரீட்சை நாளை மறுதினம் காலை 8.30 மணி தொடககம் 11.30 மணிவரை பகுதி 1, பகுதி 2 என்ற ஒழுங்கில் நடைபெறவுள்ளது. இம்மாதிரிப் பரீட்சையை வடமாகாணக் கல்வித் திணைக்கள கணித பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதென வடமாகாணக் கல்விப்பணிப்பாளா ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அடக்கத்துடன் வாழும் இல்லறத்தார் அடக்கம் இல்லாமல் இருக்கும்துறவிகளைவிட உயர்ந்தவர்கள். அடக்கமாக வாழ்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெறுகின்றனர். - மகாவீரர்-

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## கண்காணிப்பு அவசியம்

யாழ். நகரில் நிலவிவரும் போக்குவரத்து நெருக்கடிகளால் தினமும் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள்.

வாகனங்களின் அதிகரிப்பும், வாகனங்களைச் செலுத்துபவர்களின் ஒழுங்கீனமான செயற்பாடுகளுமே வாகன நெரிசலுக்குள் மக்களைச் சிக்கித் தவிக்க வைத்துள்ளது. உள்ரூரில் சேவைகளில் ஈடுபட்டு வரும் வாகனங்களைத் தவிர பெருமளவான கனரக வாகனங்களின் நடமாட்டம் யாழ். நகரை உலுப்பி வருகிறது. யாழ். நகருக்குள் நுழையும் நுழை வாயில்களில் ஒரு வழிப்பாதை அமுல் செய்யப்பட்டு வரும் நிலையில் குறிப்பிட்ட நேரத்துக்குப் பின் அந்த நடைமுறை கவனிக்கப் படாமையால், பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்திலிருந்து குடாநாட்டின் பல பிரதேசங்களுக்கும் சேவையில் ஈடுபடுத்தப்படும் பேருந்துகளாயினும் சரி, சிற்றூர்திகளாயினும் சரி போக்குவரத்து நெரிசலான ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி போன்ற வீதிகளில் மெதுவாகச் சென்று வர்த்தக நிலையங்களின் முன்பாக தரித்து நின்று, பொதிகளை ஏற்றிச் செல்வதால் அவ் வீதிகளில் பயணிக்கும் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வாகனங்களின் இத்தகைய செயற்பாடுகள் பெரும்பாலும் வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரின் கடமை முடிவடைந்த பின்னரே இடம்பெற்று வருகிறது.

வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் இல்லாத வேளைகளில் ஒருவழிப் பாதைகளைக் கூடக் கவனியாது வாகனங்களைச் செலுத்துபவர்களினால் அவ்வீதிகளில் விபத்துக்கள் ஏற்படும் நிலையும் ஏற்படக்கூடியதாகவுள்ளது.

தென்னிலங்கையில் இருந்து உணவுப் பொருட்களை ஏற்றியிறக்கும் பாரிய கனரக வாகனங்கள், பிரதான வீதிகளின் இருமருங்குகளிலும் நிறுத்திவைக்கப்பட்டு பொருட்களை இறக்குவதனால் காலையிலும், மாலையிலும் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

யாழ்.ஆஸ்பத்திரி வீதி, முனீஸ்வரன் வீதி, தனியார் வைத்திய நிபுணர் சேவை நிலையங்கள் மற்றும் வீதியோரங்களில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளினால் பயணிகள் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கிய வண்ணமுள்ளனர்.

இத்தகையதொரு அபாயகர நிலையில்தான் யாழ்.நரகப் போக்குவரத்து நெரிசல் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கி வருகின்ற போக்குவரத்துத் தொடர்பான குறைபாடுகள் இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று இப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக அமைச்சர் உறுதி அளித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். நகரின் வாகனப் போக்குவரத்து நெரிசல்களைத் தவிர்ப்பதற்கு வர்த்தகர்கள், பேருந்து, சிற்றூர்தி உரிமையாளர்கள், முச்சக்கரவண்டி, தனியார் பார ஊர்தி உரிமையாளர்கள் போக்குவரத்துப் பொலிஸார் உள்ளிட்ட உயர்மட்ட மாநாடு கூட்டப்பட்டு அதில் சகல தரப்பினரதும் ஆலோசனை பெறப்பட்டு, அதன் பிரகாரம் செயற்பட வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

இதன் மூலம் சகல தரப்பினரதும் சாதக பாதக நிலைகள் ஆராயப்பட்டு சரியானதொரு முடிவை காலதாமதமின்றி எடுத்து பாதுகாப்பான பயணிகள் போக்குவரத்துக்கு வழி செய்ய வேண்டும்.

-ஆசிரியர்-

# மாணவரின் கல்வி உயர்ச்சிக்குரிய சகல உதவிகளையும் செய்வேன்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(தும்பளை)

தும்பளை தெற்குக் கிராமத்தின் அடிப்படை வசதிகள், தேவைகள் குறித்து இங்கு உரையாற்றியவர்களின் உரைகளிலிருந்து அறிந்து கொண்டேன். இக்கிராம மாணவர்களின் கல்வி உயர்ச்சிக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்து தருவேன் என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தும்பளை தெற்கு இளந்தென்றல் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கழகத் தலைவர் ப.சுவேந்திரன் தலைமையில் நடைபெற்ற விழாவில் பேசும்போது அவர் மேலும் கூறியதாவது -

இப்பகுதி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்குத் தேவையான தளபாடங்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பன்னவேலை அபிவிருத்திக்கு 50 ஆயிரம் ரூபாவும் இப்பொழுது வழங்குகிறேன்.

இப்பகுதியில் அமைக்கப்பட வேண்டிய பொதுநோக்கு மண்டபத்திற்கான மதிப்பீட்டினைப் பிரதேச செயலரின் சிபார்சுடன் அனுப்பி வைத்தால் அதற்குரிய நடவடிக்கைகளை நான் முன்னெடுப்பேன்.

இளந்தென்றல் விளையாட்டுக் கழகத்தினருக்கு விளையாட்டு மைதானம் இல்லாத குறையை நிவர்த்தி செய்வதற்கு இவ்விடமுள்ள காணியொன்றினை இனங்கண்டு எனது கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதனைக் கொள்வனவு செய்யவும், பெண்களுக்கான கைத்தொழில் பயிற்சி நெறிக்கு இக் கிராமத்திலிருந்து 10 பெண்களைத் தெரிவு செய்து தரும் பட்சத்தில் பயிற்சி முடிவில் அவர்களுக்கான தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவி செய்வதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், ஈ.பி.டி.பியின் பருத்தித்துறைப் பிரதேச அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், ஓய்வு பெற்ற அதிபர் எம்.ஸ்ரீபதி, கலைப்பருதிப் பேராசான் ஆர்.கணேசமூர்த்தி, இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் இ.சிவபுண்ணியம், சமுர்த்தி வங்கி முகாமையாளர் இ.அன்ரனி, செ.செல்வச்சந்திரன் அதிபர், ஆசிரியர் ந.கேதீஸ்வரா, கிராம சேவையாளர் திருமதி சாருமதி உட்படப் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் விளை யாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட வீரர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (மா)

# பொலிஸாரின் நடமாடும் சேவை

(வடமராட்சி)

பருத்தித்துறை பொலிஸாரின் நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி பருத்தித்துறை புற்றளை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச் சேவையில் இரத்ததானம் வழங்குதல், வைத்தியசேவை மற்றும் அடையாள அட்டை பெறுதல் போன்ற சேவைகள் வழங்கப்படவுள்ளன.

பருத்தித்துறைப் பிரதேச மக்களுக்காக நடத்தப்படும் இச்சேவை மூலம் தேவையுடையோர் பயன்பெற முடியும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (100)

# ஷில்ப 2011 கர்மாந்த தேசிய கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றம் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டுதலில் ஷில்ப 2011 கர்மாந்த தேசிய கண்காட்சியும், விற்பனையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியை முன்னிட்டு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் தேசிய விருதுக் குரியவர்களைத் தெரிவு செய்வதற்காக நாடாளாவிய ரீதியில் நடத்தப்படும் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்விருதுக்கு சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள், கைத்தொழில் சார்ந்த சுயதொழில் முயற்சியாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

இதில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் துறையில் மிகச் சிறந்த தொழில் முயற்சியாளருக்கு சுயதொழில் முயற்சிகள் துறையில் மிகச் சிறந்த தொழில் முயற்சியாளருக்கும் தேசிய தங்க விருதும் 50 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்படும்.

இதைவிட 14 கைத்தொழில் பிரிவுகளில் தேசிய மட்டத்தில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களைப் பெறுவோருக்கு முறையே 30, 20, 10 ஆயிரம் ரூபா பணப் பரிசில்களும், வெள்ளி விருதும், மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெறுபவருக்கு 10 ஆயிரம் ரூபா பணப் பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்திலும் சகல மாவட்ட அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் விண்ணப்பங்களை எதிர்வரும் யூலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முழுமையாக எரியாத திண்மக் கழிவுகளால் சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படும் அபாயம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சிப் பொதுச் சந்தைப்பகுதியில் காணப்படும் திண்மக் கழிவுகள் முழுமையாக எரியப்படாததால் எஞ்சிய குப்பைகள் காற்றினால் எடுத்துச் செல்லப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் தற்காலிகமாக இயங்கி வரும் கிளிநொச்சி நகருக்கான பொதுச் சந்தையில் இருந்து நாளாந்தம் வெளியேறும் திண்மக் கழிவுகள் சந்தையின் வேலி ஓரங்களில் இடப்பட்டு எரியூட்டப்பட்டு வருகிறது. இக் கழிவுகள் முழுமையாக எரியப்படாமையால் மிகுதியாகவுள்ள பொலித்தீன் பை, கடதாசி என்பன காற்றினால் எடுத்துச் செல்லப்பட்டு அவை வீதியோரங்களில் சிதறிக் கிடக்கின்றன.

இதனால் போக்குவரத்துச் செய்யும் மக்களுக்குப் பெரும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

எனவே, இக்கழிவுகளை எரிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் அவற்றைச் சரியான முறையில் முழுமையாக எரிக்க வேண்டும் எனச் சந்தை வியாபாரிகளும், பொதுமக்களும் கேட்டுக்கொள்கின்றனர். (110)

# தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நடாத்தப்படும் மாணவருக்கான விஞ்ஞான ஆராய்ச்சிப் போட்டி

தேசிய விஞ்ஞான மன்றத்தினது செயற்பாடுகளில் அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக் கிடையிலான விஞ்ஞான ஆராய்ச்சித்திட்டங்களுக்கான போட்டியும் ஒன்றாகும் இப்போட்டியில் பாடசாலை மாணவா களால் செய்யப்படு கின்ற பல வேறுதுறைசார்ந்த விஞ்ஞான ஆராய்ச்சித்திட்டங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படும் என யாழ்.விஞ்ஞானச் சங்கத் தலைவர் பேராசிரியர் கு.மிகுந்தன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

இப் போட்டியில் பங்கு பற்றும் பாடசாலை மாணவர்கள் 14 - 19 வயதெல்லைக் குரியவராக இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் சிறந்த 10 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு தேசிய விஞ்ஞான மன்றமும் இலங்கை பொறியியலாளர் மன்றம், இன்ரெல் நிறுவனம் இவற்றுடன் கல்வியமைச்சும் இணைநது நடாத்த விருக்கும் "இலங்கை விஞ்ஞானம் மற்றும் பொறியியல் கண்காட்சியில்" பங்குபற்ற வாய்ப்பளிக்கப்படும்.

தெரிவு செய்யப்படும் அதிசிறந்த 3 ஆராய்ச்சித் திட்டங்களுக்கு 2012 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெறும் இன்ரெல் உலகளாவிய விஞ்ஞானம் மற்றும் பொறியியல் கண்காட்சியில் பங்குபற்ற வாய்ப்பளிக்கப்படும். இந்த அரிய வாய்ப்பை அனைத்து மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இப்போட்டியில் கலந்து கொள்வதற்காக தேசிய விஞ்ஞான மன்றம் தேவையான வழிகாட்டுதல்களையும் வளவாக்கத்தையும் ஆராய்ச்சித் திட்டங்களை செய்வதற்கு வழங்கும். இது பற்றிய ஆரம்ப வழிகாட்டல் கருத்தரங்கு இவ் வருடம் ஜூன் மாதம் 8 ஆம் திகதி நடைபெறும்.

பாடசாலை மாணவர்கள் மே மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாகப் போட்டிக்கான விண்ணப்பப்படிவத்தை தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு (National Science Foundation) அனுப்பிவைக்குமாறு கேட்கப் பட்டுள்ளனர். விண்ணப்பபபடிவங்களை www.nsf.ac.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கிக் கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்களிடையே விஞ்ஞான ஆராய்ச்சியை வளர்த்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டு நடாத்தப்படும் இப்போட்டி நிகழ்வில் அகில இலங்கை ரீதியாக பல பாடசாலை மாணவர்கள் பங்குபற்ற விருக்கின்றனர். போட்டியில் பங்குபற்றும் அனைத்து மாணவர்களுக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

இப்போட்டி பற்றிய மேலதிக விபரங்களை Ms Nadeera Jayaweera அவர்களுடன 011269677/ext III எனும் தொலைபேசி எண்ணினூடாக தொடர்பு கொள்ளலாம். தபால் மூலம் பெறவிரும்பின் Director, National Science Foundation, 47/5, Maitland Place, Colombo 7 எனும் முகவரிக்கு எழுதியும் பெற்றுக் கொள்ளலாம்.

தேசிய ரீதியில் நடைபெறும் பாடசாலை மாணவர்களுக்கான இப்போட்டியில் கலந்து வெற்றி பெற உங்கள் பகுதிப் பாடசாலை மாணவர்களுக்கு விளங்கப்படுத்தி பங்குபற்ற ஊக்கங்கொடுங்கள். உள்ளூர் மாணவ, மாணவியரின் விஞ்ஞான சிந்தனையை மீட்டிச் செல்லும் ஆக்கபூர்வமான தேசியமட்டப் போட்டிக்கு பெற்றோர்களும் ஊக்கங்கொடுத்தல் நன்று. பிராந்திய ரீதியாக இந்த வருடப் போட்டி நிகழ்வுகளில் எமது மாணவர்கள் பங்குபற்ற அன்புக்குரிய ஆசிரியர்களே! பெற்றோரே! உற்சாகமூட்டுங்கள் என்று அவர் கேடடுக் கொண்டுள்ளார்.



தும்பளை தெற்கு இளந்தென்றல் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட விளையாட்டுவிழாவின் போது அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன், எம்.சிறிபதி மற்றும் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம். (மா)

## யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபராக செல்வி ரஜுலாதேவி நியமனம்



(குருநகர்)

யாழ்.தாதியக் கல்லூரியின் புதிய அதிபராக செல்வி ரஜுலாதேவி வல்லிபுரநாதன் நியமனம் பெற்றுள்ளார்.

காப்புறுதிக் கூட்டுத்தாபன லிகிதராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற யாழ்.கந்தர்மடம் வல்லிபுரநாதன், ருக்குமணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியான இவர் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றவராவார்.

இவர் கொழும்பு, பட்டப்பின் தாதியா பயிற்சிக் கல்லூரியில் டிப்ளோமா கற்பித்தலும் மேற்பார்வையும், நாவல திறந்த பல்கலைக்கழக தாதியபட்டப் படிப்பு, மற்றும் தமிழ்நாடு காமராஜர் பல்கலைக் கழகத்தில் வைத்தியசாலை முகாமைத்துவக் கல்வியைத் தொலைகல்வி மூலமாகக் கற்றுத் தேர்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (68)

## சிவப்பு நிறமாக மாறும் வடமராட்சிப்பகுதி கடல்

(வடமராடசி)

வடமராட்சி கடற்பகுதியில் கடல்நீர் சிவப்பு நிறமாகக் காணப்படுவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் குறித்த பகுதி மீனவர்கள் நடுக்கடலில் மீன பிடிக்கச் சென்றவேளை கடல்நீா சிவப்பு நிறமாகக் காணப் பட்டதை அடுத்து அந்நீரைப் போத்தலில் எடுத்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடல் நீரில் ஏற்பட்ட நிற மாற்றத்தை அடுத்து மீனவர்கள் அச்சத்துடன் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

## ஏகாதசி தீர்த்தம்

(குருநகர்)

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஏகாதசி தீர்த்தம் சிறப்பாக நடைபெறும். காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூஜைகள் ஆரம்பமாகும். பிற்பகல் 9.00 மணிக்கு சிறப்புச் சமய செற்பொழிவு நடைபெறும் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து நாராயண சுமாமி தேவியர் இருவர் சகிதம் வீதியுலா எழுந்தருள்வார்.

நண்பகல் 12 மணிக்கு அடியார்களுக் மகேஸ்வர பூஜை இடம்பெறும். (68)

## 90 ஆவது ஆண்டு விழா

(வடமராட்சி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு விழா இவ்வருட நடுப்பகுதியில் கொண்டாடப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் எஸ்.சேதுராசா அறிவித்துள்ளார்.


இவவிழாவிற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனை முன்னிட்டு பாடசாலை மாணவர் மட்டத்திலும் திறந்த மட்டத்திலும் கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.(100)

## விவசாயக்குழுக்கூட்டம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விவசாய நிலையங்கள், விவசாய முன்னேற்றங்கள் மற்றும் விவசாயத் தேவைகள் தொடர்பாக மாதாந்தம் நடைபெற்றுவரும் மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (110)



# ஆண்களின் முன்னிற்கும் சுரப்பியில் ஏற்படும் நோய்கள் 4

## வைத்திய கலாநிதி யமுனானந்தாவின் கேள்வி - பதில்

கேள்வி:- முன்னிற்கும் சுரப்பியின் நோய்த்தன்மை எவ்வாறு ஏற்படுகின்றது?

பதில். முன்னிற்கும் சுரப்பி ஆண்களின் சிறுநீர்ப்பாதையில் சிறுநீர்ப்பைக்குக் கீழ் அமைந்துள்ளது. இதன் வளர்ச்சி ஓமோனகளின் அளவினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக வயதாகும் போது நோய்நிலை ஏற்படுகின்றது. இதன் போது சிறுநீர்ப்பாதை தடைப்படுவதால் அறி குறிகள் ஏற்படுகின்றன.

கேள்வி: எவ்வகையான நோய்கள் ஏற்படுகின்றன?

பதில்: அழற்சி நிலை பாதகமற்ற வகையில் பருமனில் பெரிதாதல், புற்றுநோய் தன்மையுள்ள வளர்ச்சி.

கேள்வி: முன்னிற்கும சுரப்பியின் நோய்நிலை அறி குறிகள் எவை

பதில்: சிறுநீர் கழித்தலில் சிரமங்கள் ஏற்படும். சிறுநீர் வரத் தாமதம், அடிக்கடி சிறிதளவு சிறுநீர் கழிதல், இரவில் அடிக்கடி சிறுநீர்வரல் என்பனவாகும். இறுதியில் சிறுநீர் கழித்தலே கடினமாகி சிறுநீர் சிறுநீர்ப்பையில் தேங்கி வேதனை ஏற்படும். இந்நிலையில் சிறுநீரினை அகற்ற கதீட்டர் (வடிகுழாய்) போட வேண்டும்.

கேள்வி: முன்னிற்கும் சுரப்பியில் நோய்நிலை எந்த வயதில் ஏற்படும்?

பதில்: அழற்சிநிலை 40 வயதிற்கு மேல் ஏற்படலாம். பாதகமற்ற முறையில் மருமனிலதிகரித்தல் 50 வயதிற்கு மேல் ஏற்படலாம், புற்றுநோய் மாற்றங்கள் 60 - 65 வயதிற்கு மேல் ஏற்படலாம்.

கேள்வி: முன்னிற்கும் சுரப்பியில் புற்றுநோயினை எவ்வாறு கண்டறியலாம்?

பதில்: வைத்தியர்கள் பரிசோதிக்கும் போது மலவாசலின் ஊடாக முன்னிற்கும் சுரப்பியினை அணுகும் போது




அதன் கடினத்தன்மையினை உணர்வர். குருதிப் பரிசோதனையில் பிஎஸ்ஏ இன் அளவு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துக் காணப்படும்.

கேள்வி: வேறு சோதனைகள் யாவை?

பதில்: முன்னிற்கும் சுரப்பியின் மாதிரியினை எடுத்து இழையச்சோதனை செய்வதால், புற்றுநோய் ஏற்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தலாம். மேலும் நோய் வேறு இடங்களுக்கு பரவாததை உறுதிப்படுத்த என்புகளின் நிலையை அறிய வேண்டும். நுரையீரல், ஈரல், மற்றும் வயிற்றின் ஏனைய அங்கங்களையும் அவதானிக்க வேண்டும். இதற்கு எக்ஸ் கதிர்ப்படச் சோதனையும் உதவும்.

கேள்வி: முன்னிற்கும் சுரப்பிப் புற்றுநோயைக் குணப்படுத்த முடியுமா?

பதில: 10 -20% அளவிலான முன்னிற்கும் சுரப்பிநோய் அறிகுறிகள்,முன்னிற்கும் சுரப்பி புற்றுநோயுடன் தொடர்பாக ஏற்படுகின்றது. பெண்களின் மார்புப் புற்றுநோய் போன்று, ஆணகளில் இது மரணத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால் ஆரம்பத்தில் நோய் அறிகுறிகள் தெரியும் போது, குருதிப் பரிசோதனையுடன் கண்டறியப் பட்டால் முற்றாகக் குணப்படுத்த முடியும்.

கேள்வி: எத்தகைய முறைகளில் முன்னிற்கும் சுரப்பியில் புற்றுநோயைக் குணப் படுத்தலாம்?

பதில்: சத்திரகிகிச்சை மூலம் முன்னிற்கும் சுரப்பியினை அகற்றல் அல்லது எக்ஸ் கதிர் சிகிச்சை மூலம் இள வயதினருக்கு சத்திரகிசிக்சை சிறந்தது. 80 வயதிற்கு மேல் புற்றுநோய் இருப்பினும் சில வேளைகளில் அவதானிப்பில் மாத்திரம் வைக்கப்படுவர்.

கேள்வி: முன்னிற்கும் சுரப்பியின் பருமன் அதிகரித்தலுக்கான சிகிச்சைகள் எவை?

பதில்: இதனால் சிறுநீர்கழித்தலில் சிரமம் ஏற்படுவதால் சத்திரசிகிச்சை மூலம் முன்னிற்கும் சுரப்பி அகற்றப் படும். சிறுநீர் வழியினூடாக முன்னிற்கும் சுரப்பிப் பகுதியினை அணுகி அதனை அகற்றும் முறைமையும் உண்டு.




சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான (சீ.பீ.ஆர்.) பணியகம் யாழ். அகவொளி நிலைய மண்டபத்தில் நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்தும் பெண் பிரதிநிதிகள் கலந்திருப்பதைக் காணலாம். (68)

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரியர்கள் இரத்ததானம்

(யாழ். நிருபர்)

சர்வதேச செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு வலி கிழக்கு செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இரத்ததான நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை யில் நடைபெற்றது.

நாடு முழுவதிலும் இருந்து மேற்படி கலாசாலை யில் கல்வி பயில வந்திருக்கும் பயிற்சி ஆசிரியர் களில் 120 பேர் இனமத பேதமின்றி யாழ். மக்களுக்கு இரத்ததானம் வழங்கினர்.

இந்நிகழ்வில் லயன் வை. தியாகராசா வலி. கிழக்கு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் எஸ். மயில் வாகனம், யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்க நிறை வேற்று உத்தியோகத்தர் மயூரன் உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (10)

## வாழ்வாதாரக் கடனுதவி

(பூநகரி)

பூநகரியைச் சேர்ந்த கல்முனை மண்ணித் தலை கிராம முன்னேற்றச் சங்கத்தினர் தமது சங்க நிதியில் இருந்து தமது அங்கத்தவர்கள் 15 பேருக்கு தலா முப்பதினாயிரம் வீதம் வாழ் வாதாரக் கடனை வழங்கும் நிகழ்வு சென்ற வாரம் நடைபெற்றது. இந்நிகழ்வு பூநகரி உதவி அரச அதிபர் கே.எஸ். வந்தகுமார் தலைமை யில் நடைபெற்றது. 15 பேருக்கும் குறைந்த வட்டியில் நான்கரை இலட்சம் ரூபா வழங் கப்பட்டது. (112)

## விவசாயிகள் சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முத்தையன்கட்டுக் குளத்திற்குக் கீழ் தற்போது ஆறு ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை மேற் கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் மூன்று ஆயிரம் ஏக்கரில் நெற் செய்கையும், மூன்று ஆயிரம் ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கையும் அப்பகுதி விவ சாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதைவிட இக்குளத்தின் கதவுகள் புனர மைக்கப்படாமல் பராமரிப்பு இன்றி பழைய நிலை யிலேயே காணப்படுவதாகவும், அக்கதவுகள் திறந்து மூடுவது பெரும் சிரமமாகவுள்ளதாக வும் சம்பந்தப்பட்டவர்கள் இதற்கான திருத்த வேலைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் விவசாயிகள் கேட்டுக்கொள்கின்றனர். (40)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(10.05.2011 - செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
சித்திரை 27 ஆம் நாள்.
நட்சத்திரம் பூசம் காலை 6.53 வரை
ஆயிலியம் பி.இரவு 5.47 வரை
திதி: ஸப்தமி மு.ப.11.14 வரை
ராகுகாலம் 2.54 -4.24
சுபநேரம் : 10.24 -01.54

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:- நண்பர் தொல்லை, மனக்குழப்பம், வீண் செலவு.

ரிஷபம்:- பண வரவு, காரிய சித்தி, மன நிம்மதி.

மிதுனம் :- தான தர்மம், காரியத்தடை, உறவினர் வருகை.

கடகம்:- பெரியோர் மதிப்பு, மன மகிழ்ச்சி, பண வரவு.

சிம்மம்:- மன அமைதி, கடவுள் வணக்கம், பணச் செலவு.

கன்னி :- பொருள் வரவு, மனக்குழப்பம், அரசபயம், விபத்து.

துலாம் :- சோம்பல், கவலை, குழப்பம், வீண் விரயம்.

விருச்சிகம்:- பண வரவு, மன நிம்மதி, காரிய சித்தி, மதிப்பு.

தனுசு:- வீண் விரயம், பணச் செலவு, காரியத் தடை.

மகரம்:- தர்மவிருப்பு, வீண்பயம், காரிய இழப்பு, கவலை.

கும்பம் :- புது எண்ணம், பண வரவு, சோம்பல் நிலை.

மீனம்:- உடல் நலக்குறைவு, பண வரவு, வீண் செலவு.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆங்கில அறிவு அவசியம் தேவை

## வடமாகாண கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து



(யாழ். நிருபர்)

**முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த அரசாங்கம் இதனை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உதவு தொகையை தற்போது வழங்கி வருவதுடன் எதிர்காலத்தில் 100 மில்லியன் ரூபா முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவுக்காக ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. எனவே, இதுவரை அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத முன்பள்ளி ஆசிரியர்கள் விரைவாக அத்தகைமை களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

காரைநகர் கிட்ஸ்பார்க் முன்பள்ளித் தலைவரும் ஆசிரியருமான க. நேர்த்தி ரானந்தன் தலைமையில் கடந்த சனிக் கிழமை மாலை யாழ்ற்றன் கல்லூரி மண்ட பத்தில் நடைபெற்ற காரைநகர் கிட்ஸ்பார்க் பாலர் பாடசாலையின் ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், அடிப்படைத் தகைமை இல்லாத முன் பள்ளி ஆசிரியர்கள் தற்போது கொடுப் பனவுகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். இத்தகைய முன்பள்ளி ஆசிரியர் கள் விரைவாக அடிப்படைத் தகைமை களைப் பூர்த்தி செய்வதோடு, முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறியையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் ஆங்கில மொழித் தகைமை பெற்றிருப்பது அவசிய மாகும். இந்த முன்பள்ளியில் ஆங்கில மொழி மூலமான தொடர்பாடல் செயற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆங் கில மொழியில் புலமை பெறுவதற்கு முன் பள்ளி தொடக்கம் ஆங்கிலத்தைப் போதிப் பது சிறந்ததாகும்.

காரை கிட்ஸ்பார்க் முன்பள்ளி ஆங்கில மொழி மூலம் போதிப்பது ஏனைய கிராமங் களில் உள்ள முன்பள்ளிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆங்கில மொழியில் பயிற்சி பெறுவதன் ஊடாக வளரும் மாண வன் நிச்சயமாகக் குறிப்பிட்ட இலக்கை அடைகிறான். எனவே, பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு முன்பள்ளிப் பருவத்தி லிருந்தே ஆங்கில மொழியைப் போதிக்க முன்வரவேண்டும்.

இன்று அனைத்துத் துறைகளிலும் ஆங் கில மொழியின் தாக்கம் பெற்றோரைப் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொள்ள வைத்துள்ளது. ஆரம்பக் கல்வியில் இருந்து ஆங்கிலத்தைக் கற்கும் பிள்ளை எதிர்காலத் தில் எந்தவொரு துறையிலும் சிறந்தவனாக மிளிர முடியும்.

தொலைக்காட்சி, கணினி போன்ற நவீன இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்கள் முன்பள்ளிகளில் பயன்படுத்தப்பட்டு நவீன கற்றல் உத்திகள் சிறுபிராயத்திலிருந்தே முன் பள்ளிப் பிள்ளைகளுக்குப் போதிக்கப்படு வதால் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த ஆளுமையும் ஆற்றல்களும் மிக்கவர்களாக விளங்க முடியும் என அவர் மேலும் தெரி வித்தார். (10)

## கண்ணிவெடி அகற்றல்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி புளியம் பொக்கணைப் பகுதியில் தற் போது கண்ணிவெடி அகற் றும் பணிகள் வாஸ் (VASH) நிறுவனத்தினால் முன் னெடுக்கப்பட்டு வருகின்றது. குறித்த பகுதியின் சந்தியை அண்மித்த ஆற்றுப்பகுதி யில் வெடிபொருட்கள் காணப் படுவதாக இனங்காணப் பட்ட இடங்களை அடையா ளப்படுத்தி அங்குள்ள கண்ணிவெடிகள் அகற்றப் பட்டு வருகின்றது. (110)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலி. மேற்கு சங்கானை பிரதேச மக்களுக்கான திண மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான கருத்துரை வழங் கும் நிகழ்வு கடந்த வியா ழக்கிழமை மாலை 3.00 மணிக்கு சங்கானை சிவப் பிரகாச மகாவித்தியாலயத் தில் நடைபெற்றது.

இக்கருத்துரை நிகழ்வில் சங்கானை பொதுச்சுகாதார பரிசோதகர், சங்கானையில் உள்ள நான்கு பிரிவு கிராம அலுவலர்கள், குடும்பநல சுகாதார மருத்துவ மாதுக் கள், திண்மக் கழிவு முகா மைத்துவ அலுவலர், (INSBB) ஐ.என்.எஸ்.பி.பீ. நிறுவனத் தினர், சங்கானைப் பிரதே சத்தைச் சார்ந்த பெருமள விலான பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்ட னர்.

இக்கருத்தமர்வில் கழிவு களை மீளப்பயன்படுத்து வது, வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுவது, கூட்டுறவுப் பசளை தயாரித் தல் போன்ற பல விடயங் கள் குறித்து துறைசார்ந்த அதிகாரிகளால் விளக்கமளிக கப்பட்டது. (கா)

# கலை மாணவர் மன்றம் நடத்தும் விவாதமேடை

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கலை மாணவர் மன்றம் நடாத்தும் சுழ லும் சொல்லாடு களம் என்ற விவாத நிகழ்ச்சி எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரது வழிகாட்டலில் இடம் பெறும் இந்நிகழ்விற்கான தொடக்க வுரையைக் கல்லூரி அதிபர் எல். ஓங்காரமூர்த்தி வழங்கவுள்ளார். அத் துடன் கம்பராமாயணத்தில் கைகேயி சூழ்வினைப்படலம் என்ற பொருளி லான சிறப்புரையைக் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் வழங்க வுள்ளார்.

தொடர்ந்து கம்பராமாயணத்தில் மந்தரை சூழ்ச்சியால் பெரிதும் பாதிப் புக்குள்ளான பாத்திரம் எது என்பது குறித்து சொல்லாடு களம் இடம் பெறும். இதில் பரதன் அல்ல கைகே யியே என சரவணை நாகேஸ்வரி வித் தியாலய ஆசிரியர் கு. பாலசண்முக னும், கைகேயி அல்ல தசரதனே என யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் நாக. தமிழிந்திரனும், தசரதன் அல்ல இராமனே என யாழ். பல்கலைக்கழக கணக்கியற்துறைத் தலைவர் பேராசி ரியர் தி. வேல்நம்பியும், இராமன் அல்ல இலக்குவனே என சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேலும் இலக்கு வன் அல்ல பரதனே என கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசனும் வாதிடுவர்.

க.பொ.த. உயர்தர வகுப்புகளில் தமிழ் கற்கும் மாணவர்களுக்குப் பெரி தும் பயன்தரத்தக்க வகையில் இந் நிகழ்வு அமையுமென்பதால் இம்மாண வர்கள் இதில் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் மேலும் அறி வித்துள்ளனர். (10)

## முன்பள்ளிக்கு கட்டடமின்றி கல்விச் செயற்பாடு பாதிப்பு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழுள்ள வசந்தபுரம் கிராமத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த முன்பள்ளி காற்றினால் சேத மடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது..

குறித்த பகுதிகளில் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நிலை யில், இங்கு வாழ்கின்ற சிறார்களில் கற்றல் செயற்பாடுகள் இம்முன்பள்ளி யிலேயே இடம்பெற்று வந்த நிலை யில் இதனால், சிறார்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ள தாகப் பொதுமக்கள் கவலை தெரி விக்கின்றனர்.

முன்னர் இம்முன்பள்ளி தற்காலிக கொட்டிலில் இடநெருக்கடியின் மத்தி யில் இயங்கி வந்ததாகவும் பலமான காற்றினால் இவை சேதமடைந்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (40)

# அத்துமீறும் மீனவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இலங்கையின் வடக்குக் கடற்பரப்பிற்குள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மீன்கள் முட்டையிடும் காலம் என்பதனால் இந்தக் காலத்தில் இந்திய கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதியில்லை என இலங்கைக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் றியர் அட்மிரல் தயா தர்மப்பிரிய தெரிவித்துள்ளார்.


எதிர்வரும் மாதம் முதல் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும்,

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த வடக்கு கடற்பரப்பில் மேலதிக படகுகள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# 19ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்தும் எண்ணம் இல்லை

## நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)



அரசியல் சாசனத்திற்கு 19ஆவது திருத்தச்சட்ட மூலத்தை அமுல்படுத்தும் உத்தேசம் கிடையாது என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சில ஊடகங்களில் தகவல் வெளியானதைப் போன்று அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

19ஆவது திருத்தச் சட்ட மூலம் அமுல்படுத்தப்பட உள்ளதாகவும் இதன் மூலம் நீதிமன்றின் சுயாதீனத் தன்மைக்கு குந்தகம் ஏற்படும் எனவும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஆனால் அரசியல் சாசனத்தில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமாயின் அது கிரமமான முறையில் செய்யப்படும் என நீதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆய்வு நடத்தப்பட்டு அதன் விளைவுகள் கவனத்திற் கொள்ளப்பட்டே அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நீதியரசரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அவை கற்பனையானவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நிபுணர் குழுவின் அறிக்கை வெளிவர அரசின் செயற்பாடே காரணம்

## ஜே.வி.பி கூறுகிறது

(கொழும்பு)

**யுத்தம் முடிந்த கையோடு ஜனநாயகத்தை நிலைநாட்டாது வேறு செயற்பாடுகளில் அரசு ஈடுபட்டமையே ஐ.நா.நிபுணர்கள் குழுவின் அறிக்கை வெளிவருவதற்குக் காரணம் என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**



பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிட்டமையை நாம் எதிர்க்கின்றோம். இதை வெளியிட ஐ.நாவுக்கு வேறு காரணங்கள் இருந்தன. இருந்தாலும் இலங்கை அரசின் செயற்பாடே இந்த அறிக்கை வெளியிடப்படுவதற்குக் காரணம். யுத்தம் முடிந்த கையோடு மீள் குடியேற்றம், அவசர காலச்சட்டத்தை நீக்குதல், மற்றும் காணாமற்போனவர்களின் விபரங்களை வெளியிடுதல் போன்ற ஜனநாயகத்தை நிலை நாட்டும் செயற்பாடுகளில் ஈடுபடாது வேறு செயற்பாடுகளில் அரசு ஈடுபட்டமையே இந்த அறிக்கை வெளிவரக்காரணம்.

இந்த அறிக்கையில் உண்மை உள்ளதா அல்லது பொய் உள்ளதா என்பது பிரச்சினையல்ல. அறிக்கை வெளியிடப்பட்டது தான் பிரச்சினை. அந்த அறிக்கை வெளிவராமல் இருக்க அரசு உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஐ.நா.சபை எமது சபை. ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் எமது செயலாளர் என்று அரசு கூறியது. ஆனால், அரசு சார்பு அணிகளின் மேதின ஊர்வலத்தில் பான் கீ மூனின் உருவப்பொம்மைகள் எரிக்கப்பட்டன. இதுதான் அரசின் கொள்கை என்றார்.

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர் விபரம் நாடாளுமன்றுக்கு

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்களின் விபரங்களை ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு முன்வைத்துள்ளார்.

உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் டி.ஜே.டி. எஸ்.பாலபட்டபெண்டி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசர் எஸ்.ஜே. விமலசந்திர, முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்ரமரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுயாதீன அரச சேவைகள் ஆணைக் குழுவின் தலைவராக பேராசிரியர் தயாசிறி பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய உறுப்பினர்களாக சட்டத்தரணி பாலித குமாரசிங்க, சிறிமாவோ ஏ.விஜயரத்ன, எஸ்.சீ.மன்னபெரும, ஆனந்தசெனவிரத்ன, என்.எச். பத்திரன, எஸ்.தில்லைநடராஜா, எச்.பீ.டபிள்யூ ஆரியவன்ச, ஏ.மொஹம்மட் நஹியா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு குறித்து அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும்

## ஆசிய மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்து

(கொழும்பு)

தருஸ்மான் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசாங்கம் பிரத்தியேக விசாரணைகளை நடத்த வேண்டுமென ஆசிய மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக எவரேனும் முறைப்பாடு செய்தால் அது தொடர்பாக விசாரணை நடத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என அதன் கொள்கைத் திட்டமிடல் பணிப்பாளர் சட்டத்தரணி பசில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தருஸ்மான் அறிக்கை வெளியிடுவதற்கு முன்னதாகவே தாம் இது குறித்து அரசாங்கத்தை தெளிவுபடுத்தியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதியாக கூற முடியாதுள்ள போதிலும் அந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியிட்டுள்ளனர்.

இத்தகைய முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டால் அது குறித்து கட்டாயமாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். சர்வதேச சட்டத்திலும் இலங்கைச் சட்டத்திலும் இதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்களை வெளிநபர்கள் சுமத்துகின்றனர் என்பதை பிரச்சனையாகக் கருதக்கூடாது. மாறாக நாட்டிலுள்ள தமிழ்,சிங்கள,முஸ்லீம் உள்ளிட்ட அனைத்து இன மக்களுக்கும் உரிமைகள் உள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கட்டாயமாக விசாரணை நடத்தப்படவேண்டும். இந்த விசாரணை நாட்டுக்கு எதிரான விசாரணைகளாக அமையாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரச்சினை இருக்குமாயின் அரசாங்கம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் விசாரணை நடத்தப்படவேண்டியது அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நிபுணர் குழுவின் அறிக்கை பிழையானது சர்வதேசத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும்

## ஜனாதிபதி சட்டத்தரணி கோமின் தயாசிறி



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் இலங்கை அரசாங்கம் பதிலளிப்பது உகந்ததல்லவென ஜனாதிபதி சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

எனினும் அந்த அறிக்கையிலுள்ள பிழையான தகவல்கள் குறித்து அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நிபுணர் குழு சட்டபூர்வமானது அல்லவென இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், அதன் அறிக்கை தொடர்பில் பதிலளிப்பதன் மூலம் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுவதாக அவர் சுட்டிகாட்டியுள்ளார்.

தருஸ்மான் அறிக்கையில் பல்வேறு பிழைகள் உள்ளதாக தெரிவித்த ஜனாதிபதியின் சட்டத்தரணி கோமின் தயாசிறி, அது குறித்து சர்வதேச சமூகத்தை தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலை அமைப்பு, தமிழ் மக்களுக்குச் சார்பான ஒழுக்கமுள்ள அமைப்பாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் நலனுக்காக செயற்பட்ட அமைப்பு என்றால் ஏன் அவர்கள் எதிர்க் கருத்துடைய அரசியல் தலைவர்களை கொலை செய்தார்கள் என கேள்வி எழுப்பிய ஜனாதிபதி சட்டத்தரணி கோமின் தயாசிறி, இதனை சர்வதேசத்திற்கு விளக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கவனம் எல்லாம் ஐ.பி.எல்

(மும்பை)

இந்திய அணியில் இடம் பிடிப்பது குறித்து நான் அதிகம் சிந்திக்கவில்லை. தற்போதைய நிலையில் எனது கவனம் அனைத்தும் ஐ.பி.எல். தொடரில்தான் உள்ளதென ரோகித் ஷர்மா தெரிவித்தார். ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரராக ரோகித் ஷர்மா சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார்.

இந்நிலையில், இந்திய அணியில் இடம்பிடிக்க வாய்ப்பு இருக்கிறதா? என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்திய அணியில் மீண்டும் இடம்பெறுவது குறித்து நான் அதிகம் சிந்திக்க விரும்பவில்லை. தற்போது ஐ.பி.எல். போட்டியில் மட்டுமே எனது கவனத்தை செலுத்த வருகிறேன். மும்பை இந்தியன்ஸ் அணி கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பதே எனது விருப்பமாகும் என்றார்.

## தேர்தலை நடத்துங்கள்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாகிகளை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்கள் பேச்சுவார்த்தை நடத்தி, மூன்று மாதங்களுக்குள் தேர்தலை நடத்துமாறு உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

2004ஆம் ஆண்டு முதல் இலங்கை கிரிக்கெட்டிற்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கு வாக்களிக்க முடியாமலிருப்பது தொடர்பாக யுனைடெட் சதர்ன விளையாட்டுக் கழகம் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றையடுத்தே உயர் நீதிமன்றம் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

மேற்படி அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கு வாக்களிக்க முடியாமலிருப்பது இலங்கை கிரிக்கெட் சபையின் யாப்புக்கு முரணானது என அக்கழகம் மேலும் தெரிவித்துள்ளது.



ஸ்பெயினில் நடைபெற்ற மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் ரபேல் நடாலை வீழ்த்திய சேர்பியாவின் நோவோக் ஜோகோவிச்சை கிண்ணத்துடன் காணலாம். இப்போட்டியில் 7-5, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றே நோவோக் ஜோகோவிச் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

## வெடித்தது மோதல்



ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணியின் தலைவர் சஹீட் அப்ரிடிக்கும் அவ்வணியின் பயிற்றுநர் வக்கார் யூனிஸுக்கும் இடையில் மோதல் ஆரம்பித்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அங்கு நடைபெற்ற ஒருநாள் சுற்றுப்போட்டியில் 3-2 விகிதத்தில் வென்றது.

ஆனாலும் அணித்தேர்வு விடயத்தில் பயிற்றுநர் வக்கார் யூனிஸ் தலையிடுவதாக சஹீட் அப்ரிடி விசனம் தெரிவித்துள்ளார். இவ்விடயம் குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இஜாஸ் பட்டிடம் தான் முறையிடவுள்ளதாகவும் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

பயிற்றுநருடனான மோதல் தீர்க்கப்பட முடியாத விடயமல்ல என்ற போதிலும் ஒவ்வொருவரும் மற்றவர்களின் விடயத்தில் தலையிடாமல் தமது வேலைகளைச் செய்யவேண்டும் என நான் கூறுகிறேன் என அப்ரிடி தெரிவித்துள்ளார்.

முன்னாள் அணித்தலைவரும் பயிற்றுநருமான வக்கார் யூனிஸுடனானமோதல் காரணமாக கடைசி இரு போட்டிகளிலும் விளையாடுவதற்கும் அப்ரிடி மறுத்ததாக செய்திகள் வெளியாகின. எனினும் அவர் அப்போட்டிகளில் பங்குபற்றினார்.

இத்தொடரின் முதல் மூன்று போட்டிகளிலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்ற நிலையில் கடைசி இரு போட்டிகளில் மேற்கிந்திய அணி வென்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அனைத்துப் போட்டிகளிலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெறுவதற்கு இருந்த வாய்ப்பு நழுவியமை குறித்து கவலையடைவதாகவும் அப்ரிடி கூறியுள்ளார்.

## நாடு திரும்பினார் யுனிஸ்கான்

(பிரிட்ஜ்டவுன்)

யுனிஸ்கானின், சகோதரர் மரணமடைந்ததால் உடனடியாகவே அவர் நாடு திரும்பியுள்ளதாகவும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான முதலாவது போட்டியில் அவர ஆடமாட்டார் என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது: யுனிஸ்கானின் மூத்த சகோதரரான சம்ஷாத் கான் ஜெர்மனியில் மரணமடைந்தார். பாகிஸ்தானில் நடைபெறும் சகோதரரின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்காக அவர் நாடு திரும்ப அனுமதி அளிக்கப்பட்டது. இதனை அடுத்து அவர் நாடு திரும்பினார்.

யுனிஸ்கான் 4 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் விளையாடிக் கொண்டிருந்தபோது, அவரின் மற்றொரு சகோதரர் மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




## சீன வீராங்கனை சம்பியன்



(கோலாலம்பூர்)

மலேசிய ஓப்பன் பட்மின்ரன் தொடரின் ஒற்றையர் இறுதிப் போட்டியில் சீனாவின் ஜிங் வாங் சம்பியனானார்.

மலேசியாவில் உள்ள கெடாக் நகரில், மலேசிய ஓப்பன் கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட் பட்மின்ரன் தொடர் நடந்தது. இதில் நேற்று முன்தின் நடந்த பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இந்தியாவின் செய்னா நேவல், சீனாவின் ஜிங் வாங் ஆகியோர் மோதினர்.

இதில் முதல் செட்டை 21-13 எனக் கைப்பற்றிய செய்னா, 2ஆவது செட்டை 8-21 என மோசமாகக் கோட்டைவிட்டார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் சிறப்பாக ஆடிய ஜிங் வாங் 21-14 என வெற்றியைத் தன்வசப்படுத்தினார்.

இறுதியில் செய்னாவை 13-21, 21-8, 21-14 என்ற செட் கணக்கில் தோற்கடித்து ஜிங்வாங் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட ஜிங்வாங், இந்த வெற்றி மகிழ்ச்சி அளிக்கிறது. முதல் செற்றை இழந்தபோதிலும் தன்னம்பிக்கையுடன் போராடி வெற்றி பெற்றது மறக்க முடியாத அனுபவம். எனக்கு ஆதரவு தந்த ரசிகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கு என் நன்றிகள். தொடர்ந்து வெற்றிகளைச் சுவைக்க விரும்புகின்றேன். அடுத்து வரும் தொடர்களிலும் சிறப்பாக ஆடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

## கற்சிலைமடு அ.த.க. சம்பியன்

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் கல்விக் கோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின இறுதிப் போட்டியில் பாலிநகர் மகா வித்தியாலயத்தை வீழ்த்தி கற்சிலைமடு அ.த.க. பாடசாலை சம்பியனாகத் தெரிவானது.

மாங்குளம் ம.வி. மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பாலிநகர் ம.வி. 9.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது. இதில் உமாகாந் 11, அபிநாத், ஜெயசாந் ஆகியோர் முறையே 9, 7 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சஞ்சீவன் மூன்று, பிரசாந், குணசாந் டினேஷ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 49 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அணி, 8.2 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்ததுடன் முதலாமிடத்தைப் பெற்றது. இதில் பிரசாந் 13, சசிகரன், முகுந்தன் ஆகியோர் தலா ஏழு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கொசிகன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி அணியை வீழ்த்தி யோகபுரம் ம.வி. வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

(42)

## மைதானம் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

எவ். ஏ. வெற்றிக் கிண்ணக் கால்பந்துத் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி யாழ். துரையப்பா மைதானத்தில் நடாத்துவதற்கான மைதான ஒழுங்கமைப்புக் குறித்தும், ஏனைய ஏற்பாடுகள் தொடர்பாகவும் இன்றைய தினம் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் ஆராயவுள்ளனர்.

எவ்.ஏ. வெற்றிக் கிண்ணத் தொடரின் முதலாவது அரையிறுதியை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், மைதான ஒழுங்கமைப்புக் குறித்து ஆராயவே இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன உயர் அதிகாரிகள் குழுவே நேற்று யாழ்ப்பாணம் வந்தடைந்தது.

இக்குழுவில், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனப் போட்டிக்குழுப் பணிப்பாளர் அன்ரனிப்பிள்ளை, அதன் இளைஞர் அபிவிருத்திப் பணிப்பாளர் மகிந்தபால, சந்தைப்படுத்தல் பணிப்பாளர் பாலிதா, ஊடகப் பணிப்பாளர் ரூக்மல் பெரேரா உள்ளிட்ட உயர் அதிகாரிகள் உட்பட பலர் அடங்குகின்றனர்.

## பறிக்கப்பட்ட பதக்கம்

இலங்கை வீரர் மஞ்சு வன்னியாராச்சியின் தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டுள்ளதாகப் பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனம் தெரிவித்துள்ளது. கடந்த பொதுநலவாய விளையாட்டு விழாவில் குத்துச்சண்டைப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற இலங்கை வீரர் மஞ்சு வன்னியாராச்சி தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து விவகாரத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளதாக பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் கூடிய பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனத்தின் ஒழுக்காற்றுக் குழு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. கடந்த வருடம் புதுடில்லியில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டு விழாவில் 56 கிலோகிராம் எடைக்கு உட்பட்டவர்களுக்கான குத்துச்சண்டைப்போட்டியில் மஞ்சு வன்னியாராச்சி தங்கப்பதக்கம் பெற்றிருந்தார். ஆனால் தடைசெய்யப்பட்ட நன்ட்ரோலின் எனும் ஊக்கமருந்தை உட்கொண்டதால் அவர் பதக்கத்தை இழந்துள்ளார்.

## உறவுக்குப் பலமான சச்சின்

(மும்பை)



சைமண்ட்ஸ்-ஹர்பஜன்சிங் இருவரது சுமுக உறவுக்கு சச்சின் டெண்டுல்கர் பாலம் அமைத்ததாக மும்பைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து மேலும் தெரியவருவதாவது: 2008ஆம் ஆண்டில் சிட்னியில் நடந்த டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் சைமண்ட்சை, இந்திய அணி சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் இனவெறியுடன் குரங்கு என்று திட்டியதாக பலத்த சர்ச்சை கிளம்பியது.

இதனால் இருவரும் கீரியும், பாம்பும் போல் அனைவராலும் பார்க்கப்பட்டனர். ஆனால் அவர்களின் இந்த தோற்றத்தை ஐ.பி.எல். போட்டி மாற்றி விட்டது.

இருவரும் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடுகிறார்கள். இணைந்து ஆடுவதால் பழைய பகைமையை மறந்து இருவரும் நட்புக்கரம் நீட்டி உள்ளனர். முதலில் இருவருக்கும் இடையிலான உறவில் நெருடல் இருந்ததாகவும், சச்சின் டெண்டுல்கர் தலையிட்டு இருவரது சுமுக உறவுக்கும் பாலம் அமைத்ததாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

## வாழ்நாளில் வேதனை

(லாகூர்)




உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் அரையிறுதியில் இந்தியாவிடம் தோல்வியடைந்தமை எனது வாழ்நாளில் மிகுந்த வேதனைக்குரியது எனப் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: நான் இந்தியாவுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் விளையாடாதபோதும், பாகிஸ்தான் தோற்றபோது நான் அடைந்த வேதனை, அதற்குமுன் எப்போதும் எனக்கு ஏற்பட்டதில்லை. எனது வாழ்க்கையில் பலமுறை பிரச்சினைகளைச் சந்தித்துள்ளேன். அப்போதெல்லாம் மிகுந்த வருத்தமடைந்தது இல்லை. ஆனால் உலகக் கிண்ணத் தொடரில் எனது உடற்தகுதி குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத தலைவர் இஜாஸ் பட், தலைவர் அப்ரிடி ஆகியோர் கூறிய சில மோசமான கருத்துகள் என்னை நெருக்கடிக்குள் தள்ளியது என்றார்.

## பாதுகாப்பு வழங்கத் தயார்

(கொழும்பு)

ஹசான் திலகரட்ணவுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுமென விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். கடந்த 1992ஆம் ஆண்டு முதல் இலங்கை கிரிக்கெட்டில் ஆட்ட நிர்ணயச் சதி இடம்பெற்று வருகின்றது எனவும், தனக்கும், தனது குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டால் அது தொடர்பான பெயர் விபரங்களை வெளியிடுவேன் என்றும் ஹசான் திலகரட்ண தெரிவித்ததைத் தொடர்ந்தே விளையாட்டுத் துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் ஹசான் திலகரட்ண கிரிக்கெட் சூதாட்டம் குறித்த பெயர்களை வெளியிடுவதோடு தனக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரினால் அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்றார்.



# குறள் சொல்லும் கதைகள் -40

இன்பத்துப் பால்

## நெருஞ்சி முள்

கடற்கரை மணலில் அண்ணாந்து படுத்திருந்தான் நகுலன். முகில் கூட்டங்கள் நிலவைத் தழுவிச் சென்றன. அர்ச்சகாவின் முகத்தை ஒத்திருக்கும் நிலவில் அன்று களங்கமில்லாததால் மேகக் கூட்டங்கள் நிலவின் அழகு கூடியிருப்பதை உணர்ந்து அர்ச்சகாவைத் தழுவிச் சென்றன. அதை நினைக்க நகுலனுக்குப் பொறாமையாக இருந்தது.

"நானும் முகில் கூட்டமாக மாறினால் எப்படி இருக்கும்" என எண்ணினான். திடீரென்று முகில் கூட்டங்களுக்குள் நடப்பதைப் போன்ற பிரமை நகுலனுக்கு ஏற்பட்டது. அர்ச்சகா மிகவும் அழகாக இருந்தாள். மெதுவாக அசைந்து அர்ச்சகாவை நெருங்கினான். அவனைக் கண்டதும் அர்ச்சகா தலை குனிந்தாள். கூந்தலில் சூடியிருந்த மல்லிகைச் சரத்தின் மணம் மூக்கைத் துளைத்தது.

"அர்ச்சகா... என் கண்ணே... உன்னைத் தழுவிய இந் நிலையில் என் உயிர் பிரிந்தால் எப்படியிருக்கும்... மலர் போன்ற உன் கண்கள் இன்று என்றுமில்லாத ஒளியை வீசிக் கொண்டிருக்கின்றன. மைபூசப்பட்ட புருவங்கள் சந்திரனில் உள்ள கறையைப் போல அழகாக இருக்கின்றன.

கனவுலகில் மிதந்து கொண்டிருந்த நகுலனின் நெஞ்சில் ஏதோ ஒரு பொருள் வந்து விழுந்தது. திடுக்கிட்டு எழுந்தான். அவனின் எதிரில் குழந்தைகள் கூட்டமாக நின்றன.

"மாமா எங்களை மன்னித்துக் கொள்ளுங்கோ. நாங்கள் விளையாடிய பந்து தவறுதலாக உங்களின் மீது விழுந்து விட்டது". அழகான பெண் குழந்தை ஒன்று வீணை மீட்டுவது போலச் சொன்னது.

நகுலன் எழுந்து சென்று அந்தக் குழந்தையைத் தூக்கினான். மிகவும் அழகான அந்தக் குழந்தை மிரண்டது. "நான் ஒன்றும் செய்ய மாட்டேன். உனது பெயர் என்ன...?"

"அர்ச்சகா" என்று கூடி நின்ற பிள்ளைகள் கூறினார்கள். நகுலன் திகைத்துப் போனான். அர்ச்சகா தனது நெஞ்சில் முகம் புதைத்திருப்பதைப் போன்ற பிரமை. "வாருங்கோ இனிப்பு வாங்கித் தருகிறேன்" என்றான் நகுலன்.

"வேண்டாம். அப்பா அடிப்பார்" கீழே இறங்க முயன்றாள் அர்ச்சகா.

"அப்படியா... போங்கோ" என இறக்கி விட்டான் நகுலன். சிறிது தூரம் ஓடிச் சென்ற அர்ச்சகா திரும்பி நின்று நகுலனைப் பார்த்துச் சிரித்தாள்.

நகுலன் அவளைப் பிடிப்பதற்காக ஓடிச் சென்றான். அர்ச்சகாவும் ஓடினாள். அவளது பெற்றோர் அருகில் இருந்தனர். விரைவாக ஓடிச் சென்ற அர்ச்சகா தனது தாயின் மடியில் அமர்ந்து கையை அசைத்துச் சிரித்தாள். அவளுடன் கூட வந்த பிள்ளைகள் மீண்டும் பந்தை எறிந்து விளையாடத் தொடங்கினர். அர்ச்சகா, தாயின் மடியில் இருந்து மெல்ல எழுந்து நகுலனைப் பார்த்துப் பார்த்து விளையாடும் இடத்தை அடைந்தாள். நகுலன் அவளைப் பிடிக்கப்போவது போல் பாசாங்கு செய்தான். அர்ச்சகா பயப்படாது பெரிதாகச் சிரித்தாள்.

நேரம் சென்று கொண்டிருந்தது. விளையாடிய பிள்ளைகளைப் பெற்றோர் வந்து அழைத்துச் சென்றனர். கடற்கரையில் சன நடமாட்டம் சிறிது சிறிதாகக்குறையத் தொடங்கியது. அர்ச்சகா இருந்த இடத்தைப் பார்த்துக் கொண்டிருந்த நகுலனுக்கு அவ்விடத்தை விட்டு எழுந்து செல்ல விருப்பமில்லாமல் இருந்தது. அர்ச்சகா அம் மணல் மீது சரிந்து அமர்ந்திருப்பதைப் போன்ற பிரமை.

கைக்குட்டைக்குள் அள்ளி வைத்திருந்த மணலைப் பிரித்துப் பார்த்தான். அர்ச்சகாவின் மென்மையான பாதங்கள் மணலில் தெரிந்தன. மென்மையான அவளது பாதங்களை அவன் வருடினான். பஞ்சுபோல மிகவும் மிருதுவாக அவளது பாதங்கள் இருந்தன. மிகவும் மெல்லியதான அனிச்சம் மலரும், அன்னப் பறவையின் இறகுமிகூட அர்ச்சகாவின் பாதங்களைக் குத்தி வருத்தும் நெருஞ்சி முள்ளாகுமோ...? அப்படி எண்ணிய நகுலனின் இதயம் வேதனைப்பட்டது. அவளது மென்மையான பாதங்களும், மென்மையான நீண்ட விரல்களும் கைக்குட்டைக்குள் இருந்த மண்ணில் தோன்றிச் சிரித்தன. **கே.வி.குணசேகரம்**

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்"
அடிக்கு நெருஞ்சிப் பழம்"- (குறள் 1120)

மிகவும் மென்மையான அனிச்சம் பூவும், அன்னப்பறவையின் இறகும் மாதரின் மெல்லிய அடிகளுக்கு நெருஞ்சி முள் போன்றவை.

# அமெரிக்காவுக்கு சென்றுகொண்டிருந்த பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ.தலைவர் மாயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் உளவு அமைப்பின் தலைவர் அகமது ஷுஜா பாஷா திடீரென மாயமாகிவிட்டார்.


பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் புறநகரான அபோதாபாத்தில் இராணுவப் பயிற்சி அக்கடமி உள்ளது.

அங்கிருந்து 500 மீற்றர் தூரத்தில் பங்களாவில் கடந்த 5 ஆண்டுகளாக அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தலைவர் பின்லேடன் பதுங்கியிருந்ததை அமெரிக்கா கண்டுபிடித்தது. தனது இராணுவத்தின் அதிரடிப் படையைப் பாகிஸ்தானுக்கே தெரியாமல் அனுப்பித் தாக்குதல் நடத்தியது. அதில் பின்லேடனைச் சுட்டுக்கொன்று உடலை ஹெலிகொப்டரில் கொண்டுவந்து கடலில் வீசிவிட்டது.

கடந்த பல ஆண்டுகளாக சுமார் ரூ.58.5 இலட்சம் கோடி செலவிட்டு பின்லேடன், அல்கொய்தாத் தீவிரவாதிகளைத் தேடி வந்த நிலையில் பாகிஸ்தானில் பின்லேடன் தங்கியிருந்த விடயம் அந்நாட்டின் மீது அமெரிக்காவுக்குக் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. பின்லேடன் தங்கிருந்தது தெரியாமல் போனது உளவுத்துறையின் தோல்வி என்று பாகிஸ்தான் இராணுவம் ஒப்புக்கொண்டது.

இதையடுத்து தோல்விக்குப் பொறுப்பேற்றுள்ள ஐ.எஸ்.ஐயின் தலைவர் அகமது ஷுஜா பாஷா பதவி விலகுவார் என்று தகவல் வெளியானது.

இந்நிலையில் பின்லேடன் விவகாரத்தில் பாகிஸ்தான் மீது அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ள



நம்பிக்கையின்மை, தவறான எண்ணத்தை மாற்றும் முயற்சியல் பாஷா அவசரமாக வொஷிங்டன் புறப்பட்டுச் சென்றார்.

ஆனால் அவர் அமெரிக்காவுக்குச் செல்லாமல் திடீரென மாயமாகிவிட்டார். அவர் சீனாவுக்கோ அல்லது சவுதிஅரேபியாவுக்கோ தப்பியோடியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# ஓசாமா பிலேடனுக்கு உதவி செய்தார்களென 3 பாகிஸ்தான் அதிகாரிகள் மீது சந்தேகம்

(இஸ்லாமாபாத்)

அல்கொய்தா தலைவர் பின்லேடன் பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் பதுங்கி இருந்த போது கடந்த வாரம் அமெரிக்க இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அபோதாபாத் நகரில் பின்லேடன் தனது 4 மனைவி மற்றும் மகன்களுடன் கடந்த 7 ஆண்டுகளாகத் தங்கியிருந்தது தெரியவந்துள்ளது. பின்லேடன தங்கள் நாட்டுக்குள் இல்லை என்று பாகிஸ்தான் பல தடவை கூறியது.

இந்த விவகாரத்தில் முழு உண்மையையும் கண்டறியும் முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. பாகிஸ்தானிடம் அமெரிக்கா விசாரணையைத் தொடங்கியுள்ளது.

பின்லேடனுக்கு உதவி செய்த பாகிஸ்தான் அதிகாரிகளின் பெயர்களை அமெரிக்கா பட்டியலாகத் தயாரித்துள்ளது. அவர்களில் பாகிஸ்தான் இராணுவத் தலைமைத் தளபதி அஷ்பக் பெர்வீஸ் கயானி, ஐ.எஸ்.ஐ. தலைவர் சுஜா பாஷா, ஐ.எஸ்.ஐ. முன்னாள் தலைவர் நதீம்தாஜ் ஆகிய 3 பேர் மீது அமெரிக்கா அதிகமாகச் சந்தேகிக்கிறது.

இவர்கள் மூன்று பேரும் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யில் செல்வாக்குடன் திகழ்ந்தனர். கடந்த 6 ஆண்டுகளாக இவர்கள் பின்லேடனுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து கொடுத்துள்ளனர்.

அமெரிக்காவின் சந்தேகப் பார்வையில் சிக்கியுள்ள 3 பேரில நதீம்தாஜ் மீதுதான் அமெரிக்கா அதிகம் சந்தேகப்படுகிறது. இவர் ஐ.எஸ்.ஐ. தலைவராக பதவி வகித்த நேரத்தில் அல்கொய்தா வலிமை பெற்றது. இவரது நடவடிக்கைகளில் அப்போதே சந்தேகம் அடைந்த அமெரிக்கா, நெருக்கடி கொடுத்து அவரை ஐ.எஸ்.ஐ. பதவியில் இருந்து விரட்டியது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. மற்றும் இராணுவத்தில் உள்ள மூத்த அதிகாரிகளில் யார் யாரெல்லாம் பின்லேடன் நடவடிக்கைக்கு உதவியாக இருந்தனர் என்ற தகவல்களை அமெரிக்கா கேட்டுள்ளது. ஆனால் அத்தகைய தகவல்கள் எதையும், அமெரிக்காவிடம் கொடுக்கமாட்டோம் என்று பாகிஸ்தான் திட்டவட்டமாகக் கூறியுள்ளது. என்றாலும் பின்லேடனுக்கு நெருக்கமானவர்கள் என்றொரு பட்டியலை அமெரிக்க தயாரித்துள்ளது. இதன் மூலம் ஐ.எஸ்.ஐ. அதிகாரிகள் பலர் சிக்கவுள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சி.பி.எஸ். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், பாகிஸ்தானில் பினலேடனுக்கு பலர் உதவி செய்துள்ளனர் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். இது பற்றி நாங்கள் விசாரித்து வருகிறோம் என்றார்.

அவர் மேலும் கூறுகையில், பாகிஸ்தானில் பின்லேடனுக்கு உதவுவதற்காக ஒரு இணையம் இருந்துள்ளது. இதுபற்றி பாகிஸ்தானிடம் விசாரணை நடத்துவோம் என்றார். பின்லேடன் சுட்டுக்கொல்லப்பட்ட பிறகு அதன தொடர்ச்சியான நடவடிக்கைக்கு ஒபாமா அளித்துள்ள அதிகார பூர்வ கருத்து இதுவாகும்.

பாகிஸ்தானை விசாரிக்கப் போவதாக ஒபாமாவே வெளிப்படையாக அறிவித்துள்ளதால் பாகிஸ்தான் அரசுக்கு மேலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.


# பின்லேடன் தங்கியிருந்த வீட்டை பாகிஸ்தான் அரசு தகர்த்ததா?

(அபோதாபாத்)

பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் பின்லேடன் பதுங்கி இருந்ததால், அந்த நகரம் உலகம் முழுக்கப் பேசப்படும் நகரமாகிவிட்டது. குறிப்பாக அபோதாபாத்தில் பின்லேடன் தங்கி இருந்த பங்களா பற்றித் தெரிந்துகொள்ள உலகில் எல்லா தரப்பு மக்களும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

பின்லேடன் பங்களா பற்றிய பிரத்தியேகத் தகவல்களை வெளியிட பத்திரிகை நிருபர்களும், புகைப்படக்காரர்களும் அங்கு செல்ல முயற்சி செய்த வண்ணம் உள்ளனர்.

இதற்கிடையே பின்லேடன் பங்களாவை வழிபாட்டுத் தலமாக மாற்றிவிட சிலர் முயல்வதாக சந்தேகம் எழுந்துள்ளது. இதனால் பின்லேடன் தங்கி இருந்த பங்களாவை இடித்துவிட பாகிஸ்தான் அரசு முடிவு செய்தது. அந்தக் கட்டடத்தைத் தரையோடு தரைமட்டமாக்கப் போவதாக பாகிஸ்தான் அறிவித்தது.



இந்த நிலையில் அபோதாபாத் நகரில் நேற்றுமுன்தினம் அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்தன. சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்த சத்தம் பல மைல் தொலைவுக்குக் கேட்டது. அபோதாபாத் நகரில் எந்தப் பகுதியில் இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது என்று தெரியவில்லை.

அபோதாபாத் நகருக்குள் நுழைய நிருபர்கள், புகைப்படகாரர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதால் என்ன நடந்தது என்று தெரியவில்லை. இந்த நிலையில பின்லேடன் தங்கி இருந்த பங்களா குண்டு வைத்துத்தகர்க்கப்பட்டு இருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதை உறுதி செய்ய பாகிஸதான் அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

# பயங்கரவாதத்தை முறியடிக்கும் சக்தி காங்கிரஸ் கூட்டணி அரசிடம் இல்லை

## பாரதீய ஜனதா குற்றச்சாட்டு

(திருப்பூர்)

**பயங்கரவாதத்தை ஒடுக்கும் சக்தியை காங்கிரஸ் கூட்டணி அரசிடம் எதிர்பார்க்க முடியாது என்று, பா.ஜ.க தேசிய செயற்குழு உறுப்பினர் இல.கணேசன் கூறினார்.**

திருப்பூரில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது -

சர்வதேச பயங்கரவாதி பின்லேடனை அமெரிக்கா கொன்றதிலிருந்து இந்தியா பாடம் கற்கவேண்டும்.

எந்தவொரு நாடும் பாதுகாப்புக்காக வேறொரு நாட்டை எதிர்நோக்கக் கூடாது. அது எவ்வளவு பெரிய வல்லரசு நாடாக இருந்தாலும் சரி, நாட்டின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்து துணிச்சலுடன் திட்டமிட வேண்டியது அரசின் கடமையாகும்.

அமெரிக்காவைப் பொருத்தவரை தன் நாட்டின் மீது தாக்குதல் நடத்திய குற்றவாளிகளைப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே எஞ்சியிருக்கிறது. அதன் விளைவாக, அதிரடி நடவடிக்கை எடுககப்பட்டுள்ளது. இச் சம்பவத்துக்குப் பிறகு தங்கள் நாட்டுக்கு அச்சுறுத்தல் வரும் என்று கருதி தொடர்ந்து அல்கொய்தா அமைப்பு மீது அமெரிக்கா கவனம் செலுத்தி வருகிறது.

ஆயினும் உலக அளவில் பயங்கரவாதத்திற்கு அமெரிக்கா எதிரானது என்று முடிவுக்கு வர முடியாது. பாகிஸ்தான் இன்றும் கூட பயங்கர வாதிகளுக்கு அடைககலம் தந்து கொண்டுள்ளது. இந்தியா மற்றும் சர்வதேச பொலிஸாரால் தேடப்படும் தாவூத் இப்ராகிமை பாதுகாப்பாக வேறு நாட்டுக்கு அனுப்ப பாகிஸ்தான் துணை புரிந்துள்ளது. காஷ்மீரில் தற்போதும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான முகாம்கள் இயங்கி வருகின்றன.

எம்மிடம் திறமையான உளவுத்துறை, அணு ஆயுதம் தயாரிக்கக்கூடிய திறமைமிக்க விஞ்ஞானிகள் உள்ளனர். ஆளுமை உள்ள தலைமை வருமானால் இந்தியாவும் 40 நிமிடங்களில் நாட்டைச் சூழ்ந்துள்ள பயங்கரவாதத்தை முறியடிக்க முடியும். அந்த திறமையை காங்கிரஸ் கூட்டணி அரசிடம் எதிர்பார்க்க முடியாது என்றார்.





நேற்று வெளியான பிளஸ் 2 பெறுபேற்றில் தமிழகத்தில் முதலிடம் பிடித்த ஓசூர் விஜய் வித்யாலயா மெட்ரிக் மேல்பள்ளி மாணவி ரேகாவைத் தூக்கி சக மாணவிகள் மகிழ்வதைக் காணலாம்.

# அயோத்தி தீர்ப்பிற்கு உச்ச நீதிமன்றம் தடை

(புதுடில்லி)

அயோத்தி வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு இடைக்கால தடை விதிதது உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தது.

உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் ராம ஜென்ம பூமி அமைந்துள்ள சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் இடம் தொடர்பான வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை, நீதிபதிகள் அப்தாப் ஆலம், ஆர்.எம். லோதா ஆகியோர் அடங்கிய சபை முன் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது. நிர்மோகி அகாரா, அகில பாரத இந்து மகா சபா,ஜமாத் உல் அமாஹி ஹிந்த், சன்னி சென்ட்ரல் வ.்.க் போர்டு உள் ளிட்ட அமைப்புகளின் சார்பில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அயோத்தி வழக்கில் அலகாபாத் உயர்நீதி மன்றத் தீர்ப்புக்கு இடைக்கால தடை விதித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்றம் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தது.

# ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் ராசா பலிக்கடாவாகவில்லை

## தி.மு.க தெரிவிப்பு

(சென்னை)

தலித் என்பதால் 2ஜி ஸ்பெக்டரம் ஊழல் வழக்கில் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா தனிமைப்படுத்தப்பட்டுவிட்டதாக புதிய தமிழகம் தலைவர் கிருஷ்ணசாமி தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்கு திமுக எம்.பியும், அக்கட்சியின் செய்தித் தொடர்பாளருமான டி.கே.எஸ். இளங்கோவன் மறுப்புத் தெரிவித்தார். கிருஷ்ணசாமியின் குற்றச்சாட்டுகள் தவறானவை என்றார் அவர்.

டில்லி நீதிமன்றத்தில் கனிமொழியின் வழக்கறிஞர் ராம் ஜேத்மலானி வாதாடியதை வைத்து கிருஷ்ணசாமி இந்த விவகாரத்தை எழுப்பியுள்ளார். ராம் ஜேத்மலானியின் வாதம் நீதிமன்ற நடைமுறை.

வழக்கறிஞர்கள் அனைவரும் தங்கள் கட்சிக்காரர்களை காப்பாற்றத்தான் முயல்வார்கள். ராசாவின் வழக்கறிஞரும் அவரைப் பாதுகாக்க வாதங்களை வைப்பார் என்று இளங்கோவன் குறிப்பிட்டார்.

கனிமொழியைக் காப்பாற்ற ராசாவை தி.மு.க சிக்கவைக்கிறது என்ற குற்றச்சாட்டுக்கும் அவர் மறுப்புத் தெரிவித்தார்.

முன்னதாக சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய கிருஷ்ணசாமி, 2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் ஆ.ராசாவை தி.மு.க பலிக்கடா ஆக்குவதாக குற்றம் சாட்டியிருந்தார். ராசாவைக் குற்றவாளியாக்கினால் இந்தியாவில் உள்ள 30 கோடி தலித்துகளை ராசாவின் பின்னால் திரட்டுவோம் என அவர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த குற்றச்சாட்டுகளை நிராகரித்த இளங்கோவன், எதிர்க்கட்சிகளின் அனைத்துக் குற்றச்சாட்டுகளுக்கும் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது என்றார்.

## வாழ்க வளமுடன்

**தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்**

மூன்றாவது அகவையில்



பெயர்: க.அக்சாள்

முகவரி: சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

HAPPY BIRTHDAY HAPPY BIRTHDAY

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................


முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ..............................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# மதுபான விளம்பரப் படங்கள் அகற்றல் பசுமைத் தாயகம் அமைப்பு வரவேற்பு



(சென்னை)

இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் மகேந்திர சிங் டோனி நடித்த மதுபான விளம்பரப் படங்கள் அகற்றப்பட்டதற்கு பசுமைத தாயகம் அமைப்பினர் வரவேற்றுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணி கப்டன் மகேந்திர சிங் டோனி நடித்த மதுபான விளம்பரபடங்கள் சென்னை நகரில் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்தன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னாள் மத்திய அமைச்சர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், டோனிக்கு கடிதம் எழுதினார். இதைத்தொடர்ந்து டோனி மதுபான விளம்பரங்களிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்று பசுமைத்தாயகம் அமைப்பினர் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

கடந்த சிலநாட்களுக்கு முன்பு டோனி சென்னையில் பார்க் ஷெராட்டன் ஓட்டலில் தங்கியிருந்தபோது இந்த ஆர்ப்பாட் டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் போது மதுபான விளம்பரங்களில் நடிக்கக்கூடாது என்றும் சென்னையில் வைக்கப்பட்டுள்ள விளம்பரப் படங்களை உடனடியாக அகற்றவேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். இந்த நிலையில் சென்னை நகரில் பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த டோனி நடித்த விளம்பரப் படங்கள் அகற்றப்பட்டன. இதுகுறித்து பசுமைத் தாயகம் அமைப்பின் மாநில செயலாளர் அருள் கூறியதாவது -

முன்னாள் மத்திய மந்திரி டாக்டர் அன்புமணி ராமதாஸ் கோரிக்கையை ஏற்று சென்னை நகரில் அனைத்து பகுதிகளிலும் வைக்கப்பட்டிருந்த டோனி விளம்பர படங்கள் அகற்றப்பட்டதை வரவேற்கிறோம்.

அதே நேரத்தில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கும் ஒவ்வொரு அணியும் மதுபான நிறுவனங்களிடம் பணம் பெற்றுக்கொண்டு மது பானங்களை சிறுவர்களிடமும் இளைஞர்களிடமும் திணிக்கிறார்கள். இந்த தவறான செயலை அனைத்து ஐ.பி.எல். அணிகளும் கைவிட வேண்டும் என்றார்.

# தேங்கிக் கிடக்கும் குப்பைகளால் தொற்றுநோய் பரவும் ஆபத்து

## நடவடிக்கை எடுக்குமா மாநகர சபை



(யாழ்ப்பாணம்)

பாசையூரிலுள்ள புதுக்குடியிருப்புக்குச் செல்லும் வீதியில் குப்பைகள் தேங்கிக் கிடப்பதால் இவ்வீதியூடாகப் பயணம் செய்வதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த இவ்வீதி சிறு ஒற்றையடிப் பாதைபோன்று இருப்பதனால், இவ்வீதியின் சந்தியில் கொட்டப்படும் குப்பைகள் பெருமளவில் தேங்கிக் காணப்படுகின்றன. அத்துடன் கோழிகள், விலங்குகள் போன்றன அவற்றைக் கிளறி வீதியின் நடுவே போட்டு விடுவதால் அதனூடகப் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் முதல் ஏனையவர்கள் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே செல்கின்றனர்.

மேலும் அயற்பகுதிகளில் உள்ள வீடுகளில் நுளம்புப் பெருககம் காணப்படுவதாகவும், இதனால் டெங்கு போன்ற நுளம்புகளின் தாக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாகவும் அப்பகுதிக் குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் இவ்வீதி 15 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் இருப்பதுடன், அயலில உள்ள வீடுகளின் வளவுகளில் உள்ள மரங்கள் வீதிக்கு நடுவே வந்திருப்பதனால் இரவு நேரங்களில் பயணிக்கும்போது பெரும இருள் சூழ்ந்து காணப்படுகின்றது. இந்த வீதியில் தெருவிளக்குகள் பொருத்துமாறு பல முறை கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் இதுவரை அவை பொருத்தப்படவில்லை.

இதனால் இரவு நேரங்களில் பயணிக்கும் போது மக்கள் அச்சத்துடனேயே செல்ல வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

எனவே மாநகர சபைக்கு உடபட்ட இப்பகுதியைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (21)

# காக்கைதீவிலிருந்து கல்லுண்டாய் வீதியில் கழிவுகள் கொட்டுவதால் துர்நாற்றம்

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

காக்கைதீவிலிருந்து கல்லுண்டாய் செல்லும் வீதியோரத்தில் கொட்டப்படும் கழிவுகளால் அப்பகுதியால் போக்குவரத்துச் செய்ய முடியாது மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரி விக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் தென்னிலங்கையி லிருந்து கொண்டுவரப்படும் உருளைக் கிழங்குகளை வர்த்தகர்கள் தெரிவு செய்தபின் அழுகிய கிழங்குகளை இங்கு வாகனங்களில் கொண்டு வந்து கொட்டுவதால் துர்நாற்றம் வீசுவதாகப் பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட இப்பகுதிகளில் விலங்குகளின் கழிவுகள், உடல் எச்சங்கள் என்பனவும் கொட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இதனால் இவ்வீதியூடாக பயணிப்போர் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்வதாகவும், அத்துடன் இதனைச் சுவாசிப்பதால் நோய் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்வீதிப் பகுதிகளில் குப்பைக் கழிவுகளைக் கொட்டுவோர் ஒரு கணம் சிந்தித்துச் செயற்படவேண்டும் என மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (104)

# உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கல்வியமைச்சின் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பாடசாலை மாணவர்களிடையே நாடளாவிய ரீதியில் கட்டுரைப் போட்டியினை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு இப்போட்டியினை க.பொ.த.உயர்தர மாணவர்களிடையே மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடத்தவுள்ளது. இப்போட்டியின் மூலம் சுற்றாடல் நேயமுற்ற சந்ததியொன்றினைக் கட்டியெழுப்பவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கட்டுரைப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபர்களுக்கு ஊடாக தங்கள் கட்டுரைகளை அதிபர் மூலம் உறுதிப்படுத்தி, மாணவர் பெயர், முகவரி, மாவட்டம் என் பவற்றைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

கட்டுரைகள் யாவும் 2011 மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு, இல. 104, பரிசரபியச, டென்சில் கொப்பேக்கடுவ மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெறவுள்ள இக்கட்டுரைப் போட்டி, மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் நடைபெறவுள்ளது. கட்டுரைக்கான கருப்பொருளாக சூழல் தொகுதியின் பாதுகாப்பு, இயற்கை வளங்களை முகாமைப்படுத்தல், கடற்கரைசார் மற்றும் கடல்சார் வளம், சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி, காடுகளும் வனவிலங்குகளும், தொழிற்சாலைகளும் சுற்றாடலும், மனித ஆரோக்கியம் மற்றும் நலன், சுற்றாடல் மற்றும் கலாசார மரபுரிமை என்ற தலைப்பில் அறிவிக்கப்பட்டுள்ளன.

கட்டுரைகள் தாளின் ஒருபக்கத்தில் 500-750 வரையான சொற்களைக் கொண்டிருக்க வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தேசிய மட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களுடன் முறையே ரூபா 5000, 3000, 2500 பணப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் பத்து ஆறுதல் பரிசில்களும் காத்திருக்கின்றன.

மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் பிரதேச பிரதிப்பணிப்பாளர், ஆர்.வலப்பொலவுடன் 0117877289, 0718188643 இலக்கத் தொலைபேசிகளுடன் தொடர்பு கொள்ளலாம். (06)

# மூலிகைச் செடிகளைக் கொண்டுசென்ற வெளிநாட்டு இராஜதந்திரி சிக்கினார்

(கொழும்பு)

ஏற்றுமதிக்குத் தடைசெய்யப்பட்ட மூலிகைச் செடிகளைக் கடத்திச் செல்ல முயன்ற வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கை சுங்க அதிகாரிகளிடம் சிக்கினார்.

10 கிலோ எடையுள்ள கொத்தல ஹிம்புடு என்ற மருத்துவ குணமுள்ள மூலிகைச் செடிகளைக் கடந்த சனிக்கிழமை தனது நாட்டுக்குக் கடத்திச்செல்ல முயன்ற போதே இவர் சுங்க அதிகாரிகளிடம் சிககிக் கொண்டார்.

கொழும்பிலுள்ள, மத்திய கிழக்கு நாடொன்றின் தூதரகத்தில் பணியாற்றும் இந்த இராஜதந்திரியின் பையில் ஏற்றுமதிக்குத் தடைவிதிக்கப்பட்ட மூலிகைச் செடிகள் இருப்பது பாதுகாப்புச் சோதனையின்போது கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து சுங்க அதிகாரிகள் அவரைத் தடுத்துவைக்க முயன்ற போதும் பையைச் சோதனையிட முயன்ற போதும் அவர் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை.

தனது இராஜதந்திர சிறப்புரிமையைப் பயன்படுத்திக் கொண்டு தனது நாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளார்.

இவர் சுங்க அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என றும் தடுத்து வைக்கும் பத்திரத்தில் ஒப்பமிட மறுத்ததுடன் இது தொடர்பான விசாரணை நடத்தும் ஆவணங்களிலும் கையெழுத்திட மறுத்துவிட்டதாக சுங்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சுங்க அதிகாரிகளுக்கு இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து கொடுக்கப்பட்ட அழுத்தங்களை அடுத்து அந்த இராஜதந்திரி எந்த விதமான குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாமல் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, இந்தக் கடத்தலைத் தடுக்க முயன்ற சுங்க அதிகாரி மீது இந்த இராஜதந்திரி வெளிவிவகார அமைச்சில் முறைப்பாடு ஒன்றையும் செயதுள்ளார்.

கொத்தல ஹிம்புடு என்ற இந்த மூலிகைச் செடியானது நீரிழிவு நோய்க்கு பாரம்பரிய மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த மூலிகையில் இருந்து தயாரிக்கப்பட்ட பல மருந்துப் பொருட்களுக்கு காப்புரிமை பெற்றுள்ள ஜப்பானிய நிறுவனங்கள் இதைச் சட்டவிரோதமான முறையில் இலங்கையில் இருந்து இறக்குமதி செய்து வந்தன.

இதையடுத்து இந்த மூலிகையை தாவரமாகவோ, உலர்ந்த இலைகளாகவோ அல்லது எந்த வடிவிலோ ஏற்றுமதி செய்வதற்கு கடந்த 2006ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் தடைவிதித்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் கற்க வேண்டியது அவசியம்

(கொழும்பு)

பௌத்த தேரர்களும் தமிழ் மொழி கற்றிருக்க வேண்டுமென அகில இலங்கை பிரிவெனே ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல வருட கால யுத்தம் நிறைவுக்கு வந்துள்ள நிலையில் இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்த தேரர்கள் தமிழ்க் கற்றிருக்க வேண்டுமென அந்தச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.


அத்துடன் எதிர்காலத்தில் மோதல்களைத் தவிர்ப்பதற்கு தேரர்களால் திட்டங்களை செயற்படுத்த முடியுமென அந்தச் சங்கத்தின் தலைவர் கொம்பிட்டியே சுசில தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மொழி கற்பதற்கென தேரர்கள் வகுப்புக்களுக்குச் செல்ல வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள 720 பிரிவெனேக்களில் கல்வி கற்கும் மாணவ தேரர்கள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென சுசில தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## வல்லரசுகள் மீது கண்டனம்

(கொழும்பு)



பிரிவினைவாதத்தாலும், பயங்கரவாதத்தாலும் மேற்கொள்ள முடியாத சில விடயங்களை மேற்கொள்வதற்கு சில வல்லரசு நாடுகள், முயற்சிப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும குற்றம் சுமத்தியுள்ளார். இலங்கைக்கு எதிரான அந்த நாடுகள் அணிதிரள்வதாகவும், எனவே நாட்டிற்கு எதிராக அழுத்தங்களை முறியடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மருந்து ஏற்றுமதி தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இலங்கைக்கான மருந்துப் பொருட்கள் தாமதமாகவும், தரம்குறைவாகவும்,இறக்குமதி செய்யப்படுவதாக குற்றம்சுமத்தப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் இரு நாடுகளின் சுகாதார அமைச்சுகளும் உயர்மட்ட சந்திப்புகளை நடத்தத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, இந்தமாதம் புதுடில்லிக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது அவர் மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத்தை சந்திக்கவுள்ளார்.

மருந்து ஏற்றுமதி தொடர்பாக அண்மையில் ஏற்பட்ட நெருக்கடிகள் குறித்து இரு நாட்டு அமைச்சர்களும் விரிவாக ஆராயவுள்ளனர்.

ஏற்கனவே மனித நலனற்ற மருந்துப்பொருட்களை விநியோகித்த குற்றச்சாட்டின் பேரில் 10 இந்திய நிறுவனங்களின் கேள்விப்பத்திரங்கள் இரத்துச்செய்யப்பட்டன.

இந்த நிலையில், குறித்த நிறுவனங்கள் தொடர்பில் இந்திய தரப்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய உயர்ஸ்தானிகர் அண்மையில் உறுதியளித்ததற்கு அமையவே இந்த இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன.

# பிரதேச அபிவிருத்திக்கான நிதியை முறையாகப்பயன்படுத்தவேண்டும்

**யாழ். ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் பேச்சு**



(யாழ்ப்பாணம்)

பிரதேச ரீதியாக அபிவிருத்தித்திட்டங்களுக்கு நிதிஒதுக்கப்படுவது மட்டுமல்ல பிரச்சினை. அந்த நிதி அதுசரியாகப் பயன்படுத்தப்படவேண்டும். இவ்வாறாக பிரதேச ரீதியாக கிராமங்களில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக நேரில் வந்து பார்வையிடப்படும் என்பதுடன் இதற்கு அபிவிருத்தியுடன் சம்மந்தப்பட்டவர்கள் அவை தொடர்பாக விளக்குவதற்குத் தயாராக இருக்கவேண்டும் என பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவான்ந்தா தெரிவித்தார்.

நேற்று முற்பகல் யாழ். பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற யாழ். பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இப் பிரதேசத்தின் அடுத்த அபிவிருத்திக்குழுக் கூட்டத்தை நடாத்த ஒரு மாதம் வரை காத்திருக்காது விரைவில் நடாத்தி இப்பிரதேசத்தின் துரித அபிவிருத்தியை மேன்மையடையச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இப் பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெண்டின் (உதயன்), தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ். சிறிதரன்,யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர் அத்துடன் யாழ். மாநகர சபை உறுப்பினர்களும் இதில் பங்குபற்றினர். இவ் அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின்போது யாழ். பிரதேச அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு திட்டங்கள் குழுவின் பரிந்துரைக்காக முன்வைக்கப்பட்டன.

வீதி அபிவிருத்தி, வடிகால் அமைப்பு, நீர்விநியோகம், கடற்தொழில் அபிவிருத்தி, மீள் எழுச்சித்திட்டம், மாநகர சபை அபிவிருத்தித்திட்டங்கள், டெங்கு நோய்த்தாக்கம், மீள்குடியமர்வு, மின்சாரம், வீடமைப்பு, காசுக் கானவேலை உள்ளிட்ட அபிவிருத்தித்திட்டங்கள் முன்வைக்கப்பட்டு அதற்கான அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்படடுள்ளது.

இவ் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா அவர்கள் அங்கு சமூகமளித்திருந்த அதிகாரிகளையும், பொது அமைப்பின் பிரதிநிதிகளையும் நேரடியாக தொடர்புபடுத்தி அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான விளக்கங்களையும் கேட்டறிந்து அவற்றை தடையின்றி முன்னெடுப்பதற்கான ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கினார். (பா)

# பொன்சேகா தாக்கல் செய்த மனு குறித்து சிறைச்சாலை ஆணையர் நீதிமன்றில் ஆஜர்



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போது பொன்சேகாவை உரிய நேரத்தில் மன்றத்தில் ஆஜராக்கத் தவறியமை தொடர்பாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகி விளக்கமளித்தார்.

தன்னை நாடாளுமன்ற உறுப்பினர் பதயிலிருந்து நீக்கியதை ஆட்சேபித்து சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனு தொடர்பாக மே 3 ஆம் திகதி நடைபெற்ற விசாரணையின்போது பொன்சேகாவை நீதிமன்றில் ஆஜராக்கத் தவறியமை குறித்து விளக்கமளிக்குமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதன்படி சிறைச்சாலை ஆணையாளர் இன்று நீதிமன்றில் ஆஜரானார். போக்குவரத்து நெரிசல் காரணமாக பொன்சேகாவை உரிய நேரத்திற்கு நீதிமன்றம் அழைத்துவர முடியவில்லை என அவர் விளக்கமளித்தார்.

அவரின் விளக்கத்தை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், அவ்வாறான சம்பவம் இனி நடைபெறக்கூடாது என வலியுறுத்தியது.

போக்குவரத்து நெரிசல் ஏற்படலாம் என்பதைக் கருதிற்கொண்டு, விசாரணைளுக்காக மனுதாரரை உரிய நேரத்தில் நீதிமன்றுக்கு அழைத்துவர நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

# கந்தளாயில் சீனி உற்பத்தி விரைவில் நவீன தொழில்நுட்பம்

அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் கந்தளாய் சீனிக் கைத்தொழில் நிறுவனத்தின் ஊடாக சீனி மற்றும் சில்லறை உற்பத்திகளை விரைவு படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நிறுவனத்தை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தனியார் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இதன் மூலம் உயர்ரக தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உள்நாட்டு சீனி உற்பத்தியை 40 சதவீதம் வரை உயர்த்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் நாட்டில் சீனி உற்பத்தியை மேம்படுத்தல் அதன் மூலம் பிரதேச அபிவிருத்திக்கு உதவும் வண்ணம் 40000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் கரும்புப் பயிர் செய்கையினை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## வெளிநாடுகளால்.....

உங்களது பெயரால் உங்களுக்கு நாசம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபடும் உங்கள் மத்தியிலுள்ள ஒருசிலர் தவறான தகவல்களை பிறநாட்டு முகவர் களுக்கு பணத்திற்காக விற்பனை செய்து, தங்களது சுயலாப நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டுவருகிறார்கள்.

வெளிநாடுகள் இந்தத் தவறான தகவல்களை வைத்துக் கொண்டு எமது விடயங்களில் அநாவசியமாகத் தலையிடுகின்றன. இது எமது மக்களாகிய உங்களுக்கு மீண்டும் மீண்டும் பாதிப்புக்களையே உண்டு பண்ணும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு நீங்கள் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

கடந்த பல வருடகாலமாக சொந்த இருப்பிடங்களை விட்டு தூர இடங்களுக்குச் சென்று பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் வாழ்ந்துவந்த நீங்கள் இன்று மீண்டும் உங்களது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்புகிறீர்கள். சமாதானத்தின் மூலம் இந்த நிலையை நீங்கள் பெற்றுக் கொண்டுள்ளீர்கள். நீங்கள் அனைவரும் நல்ல தொரு எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள அனைத்து உதவிகளையும், வசதிகளையும் செய்து

கொடுக்க வேண்டும் என்பதே எமது அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை சிதறடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை நீங்கள் உங்கள் மத்திக்கு வரவிடக்கூடாது.

தங்களது சொந்த வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதை மாத்திரம் நோக்கமாகக் கொண்டவர்கள், உங்கள் மத்தியில் பிரச்சினைகளை உருவாக்கி அந்தப் பிரச்சினைகளை டொலர்களுக்காக வெளி நாடுகளுக்கு விற்று பிழைப்பு நடாத்துகிறார்கள். இதனை நீங்கள் உணர்ந்து கொண்டு வாழ முற்படவேண்டும் அத்துடன், இடம்பெயர்ந்துள்ள மக்கள் அனைவரும் கூடிய விரைவில் தங்களது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவர் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகான ஆளுனர் சந்திரசிறி, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஹத்துரு சிங்க, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் (உதயன்) மற்றும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, சிறிதரன், சரவணபவன், விநாயகமூர்த்தி ஆகியோரும், படையினர் மற்றும் ஆயிரத்திற்கு அதிகமான மக்களும் கலந்து கொண்டனர்.

# சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு கிட்டுவது எப்போது?

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் கோண்டாவில் சாலையில் பணியாற்றும் பேருந்து சாரதிகள், நடத்துனர்கள், இயந்திரத்திருத்துனர்கள் இணைந்து தமக்கான மாதாந்த ஊதியத்தை குறிப்பிட்ட திகதியில் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் நேற்றையதினம் கோண்டாவில் சாலையிலிருந்து, யாழ். மத்திய பஸ்நிலைய ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு அதிகாரிகள் வந்த போதே ஊழியர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஊழியர்கள் தெரிவித்ததாவது,

எமக்கான மாதாந்த சம்பளம் ஒவ்வொரு மாதமும் எட்டாம்திகதி முழுமையாக வழங்கப்படும். ஆனால் கடந்த ஆறு மாதங்களாக குறித்த திகதியில் சம்பளம் வழங்கப்படுவதில்லை. நாள் தவறி வழங்கப்படும் சம்பளமும் முழுமையாக் வழங்கப்படுவதில்லை. முதலில் குறித்த தொகையை வழங்குவார்கள் பின்னர் மிகுதிச்சம்பளத்தை மாதத்தின் இருபதாம் திகதிக்குப்பின்னர் கேட்டுத்தான் பெற வேண்டும்.

இவ்வாறு நாள் தவறி, முறையற்றவகையில் சம்பளம் வழங்கப்படுவதால் நாம் பொருளாதார ரீதியாகப் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. குறிப்பாக எமது தேவைக்காகப் பெற்ற வங்கிக்கடனைச் செலுத்த முடியாத நிலை உள்ளது.

எனவே எமது நிலையைப் புரிந்து கொண்டு குறித்த திகதியில் முழுமையாக சம்பளத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். எனத் தெரிவித்தனர்.

பகுதியளவு சம்பளத்தை ஊழியர்கள் வாங்க மறுத்ததை அடுத்து அதிகாரிகள் மீளவும் கோண்டாவில் சாலைக்குத் திரும்பிச் சென்று விட்டனர்.

இது தொடர்பாக சிறிலங்கா சுதந்திர தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் யாழ்ப்பாண



செயலாளர் சத்தியேஸ்வரனிடம் கேட்டபோது,

ஊழியர்களுக்கான சம்பளத்தை ஒரே நாளில் வழங்குவதற்கு போதியளவு நிதி இல்லாமையே காரணமாகும். மாதாந்தம் சம்பளம் வழங்குவதற்கு சுமார் 55 இலட்சம் தேவையாக உள்ளது. இதில் பத்து இலட்சம் ரூபாவினை அரசு மானியமாக வழங்குகின்றது. மிகுதிப் பணத்தினை எமது உழைப்பிலேயே வழங்கவேண்டும்.

ஆனால், தற்போது தனியார் பஸ்களின் அதிகரிப்பு, பிறமாவட்டங்களிலிருந்து வருகின்ற பஸ் சேவை போன்றவற்றால் எமக்கு வருமானம் குறைவாகவே உள்ளது. இதனால் சம்பளம் வழங்குவதற்கு நிதி பற்றாக்குறையாக உள்ளது.

ஊழியர்களின் பிரச்சினை எமக்கு நன்றாகத் தெரியும் ஆனால் ஒரேநாளில் சம்பளத்தை வழங்க நிதிஇல்லை எனவே ஊழியர்கள் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை தமது சம்பளத்தை உரியதிகதியில் நிர்வாகம் தரத்தவறும் பட்சத்தில் தாம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். (கா)

# மீள்குடியேற்றப் பதிவுகள்...



ஊர் திரும்பும் மகிழ்வில்



மாவைக் கந்தனுக்கு வழிபாடு




பாதுகாப்பு வலயம் இனி இல்லை



மங்களகரமாய் ஆரம்பம்

## இணையத்தள முடக்கத்திற்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் செய்தி வெளியிட்டமை தொடர்பாக லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்தி வைக்கப்பட்டமையை எதிர்த்தும், அந்த இணையத்தளத்தின் ஊடகவியலாளர் சாந்த விஜேசூரிய கைதுசெய்யப்பட்டமையைக் கண்டித்தும் கொழும்பு - புறக்கோட்டை ரயில்வே நிலையத்திற்கு முன்னால் நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

ஜனநாயகத்திற்கான ஊடக இயக்கம் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அங்கு கருத்துத் தெரிவித்த ஜனநாயகத்திற்கான ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சந்தன சிறிமல்வத்த,

லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் மீதான தடையை நீக்க வேண்டுமெனவும், லங்கா ஈ நியூஸ் இணையத்தள ஊடகவியலாளர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கும் பொலிஸாருக்கும் நீதித்துறைக்கும் உண்டெனவும் கூறினார்.

ஊடகவியலாளர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. ஆனால் 10 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 8 பேர் தாக்கப்பட்டுள்ளனர். ஒருவர் கடத்தப்பட்டுள்ளார் என அவர் தெரிவித்தார்.

## மனிதாபிமான கடப்பாடுகளை இலங்கை என்றும் மறக்காது

### நீதி அமைச்சர் கூறுகிறார்



(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றங்களை ஆராய வேண்டுமென கூறும் ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட தருஸ்மன் அறிக்கையை எதிர்த்த போதும், இலங்கை மனிதாபிமான விடயங்களை மதிக்கவும் நிறைவேற்றவும் தனக்குள்ள கடப்பாட்டை மறந்துவிடவில்லை என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நாடும் தம் உள்நாட்டுப் பிரச்சினையில் தாம் கைக்கொண்ட வழிமுறைகளை மீள்பார்வைக்கு உட்படுத்தி சுயவிமர்சனம் செய்யவேண்டும் என்பதில் எமக்கு உடன்பாடு உண்டு. எனினும், குற்றஞ்சாட்டும்போது பாரபட்சம் காட்டக்கூடாது. சுயவிமர்சனம் வல்லரசு நாடுகளுக்கும் பொருந்தும். எம்மைப் போன்ற சிறிய நாடுகளுக்கு மட்டுமல்ல என ஹக்கீம் கூறினார்.

இலங்கையில் ஆள்கடத்தல் மற்றும் இலாப நோக்கிலான மனித கடத்தல் தொடர்பான வேலைப்பட்டறையில் பேசும் போதே அமைச்சர் இக்கருத்தை வெளியிட்டார்.

## தேசிய வனப்பாதுகாப்பு இலட்சினைகள் அறிமுகம்

(கொழும்பு)

தேசிய வனாந்தரங்களை அடையாளப்படுத்தும் விசேடமான கொடியொன்றும் இலட்சினையொன்றையும் அறிமுகப்படுத்துவதற்கு வன பாதுகாப்பு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு வனாந்தரத்திற்கும் வெவ்வேறான கொடி மற்றும் இலட்சினைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் சந்திரவங்ச பதிராஜ தெரிவித்துள்ளார்.

குறிப்பாக யால மற்றும் வில்பத்து போன்ற தேசிய வனாந்தரங்கள் ஆரம்ப காலம் தொட்டு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகத் திகழ்கின்றன.

புதிதாக அறிமுகப்படுத்தவுள்ள இலட்சனை மற்றும் கொடியை தொப்பிகளிலும், மேலங்கிகளிலும் பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகள் இவற்றைக் கொள்வனவு செய்து நினைவுப்பொருட்களாகவும் வைத்துக்கொள்ள முடியும் என வன பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் சந்திரவங்ச பதிராஜ தெரிவித்துள்ளார்.

## 'அல்கொய்தா' உருவாக்கம் தொடர்பில் பாகிஸ்தான் பொறுப்பேற்க முடியாது

### பிரதமர் கிலானி அறிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத அமைப்பான அல்கொய்தாவின் உறுப்பினர்களுடன் தமது நாட்டு உளவுத்துறை தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை பாகிஸ்தானிய பிரதமர் யூசுஃப் ராஜகிலானி மறுத்துள்ளார்.

ஏனைய நாடுகள் தங்களது சொந்த உளவுத்துறையின் தவறுகளுக்காக பாகிஸ்தானைக் குற்றஞ்சாட்டுவதற்கு நாம் அனுமதிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

பின்லேடன் விவகாரத்தில், பாகிஸ்தானில் உளவுத்துறையில் தவறு ஒன்று நேர்ந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொண்ட அவர், ஆயினும் அதற்கு பாகிஸ்தான் மாத்திரம் பொறுப்பேற்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

ஒசாமா பின்லேடனை கொல்வதற்காக அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்ட இரகசிய இராணுவ நடவடிக்கை குறித்து பாகிஸ்தானிய நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு பேசியுள்ளார். பின்லேடனின் இருப்பிடம் குறித்த ஆரம்பக்கட்டத் துப்புகளை பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவு நிறுவனந்தான் அமெரிக்காவுக்கு வழங்கியிருந்த போதிலும், அமெரிக்காவின் அந்த இரகசியத் தாக்குதல் நடவடிக்கை குறித்து பாகிஸ்தானுடன் கலந் தாலோசிக்கப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, ஒசாமா பின்லேடன் எவ்வாறு பாகிஸ்தானில் ஒளிந்திருக்க முடிந்தது என்பது குறித்துப் புலனாய்வு செய்யுமாறு தான் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அல்கொய்தா அமைப்பின் உருவாக்கத்தில் ஏனைய நாடுகளுக்கும் பங்கிருக்கிறது என்றும், அவர் குற்றஞ்சாட்டினார். அது குறித்த உண்மைகளை அனைவரும் ஒட்டு மொத்தமாக ஒத்துக்கொள்ள வேண்டும் என்றும் ஏனையவர்களின் தவறான மற்றும் குறைபாடுடைய கொள்கைகளுக்கு பாகிஸ்தான் மாத்திரம் பொறுப்பேற்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

### அரசின் நற்பணிகள்....

நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் உட்பட பல தரப்பினராலும் பாராட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் வேண்டுதல்களை, இலங்கை எந்தத் தருணத்திலும் ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்த பாதுகாப்பு செயலாளர், அமைதி காக்கும் பணிகளுக்காக இலங்கை இராணுவத்தை ஹேற்றிக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில், இராணுவத்திற்குப் பாரிய பணி இருந்த காலப்பகுதியில் கூட, ஐக்கிய நாடுகளின் வேண்டுகோளுக்கு அமைய, மனிதாபிமான மற்றும் அமைதி காக்கும் பணிகளுக்காக அரசாங்கம் தமது படையணிகளை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தருஸ்மன் அறிக்கை வெளியான உடனேயே, ரஷ்யா அந்த அறிக்கைக்கு எதிரான செயற்பாட்டைக் கொண்டிருந்ததனை பாதுகாப்பு செயலாளர் அந்தச் செவ்வியில் பாராட்டியுள்ளார்.

### புத்தி . சாதுரியமற்ற...

நிலைமை ஒன்றை ஏற்படுத்தினார். இன்று நாட்டின் அனைத்து மக்களும் ஒற்றுமையாகவும், சுதந்திரமாகவும் வாழும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த முப்பது வருட கால யுத்தத்தின் போது எமது நாடு இழந்த உயிர்கள் மற்றும் உடைமைகள் எண்ணிலடங் காதது. 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் விதவைகள் ஆகினர். 60, 000 இற்கும் அதிகமான இளைஞர்கள் அங்கவீனர்களாகினர். மூன்று இலட்சம் பேர் அகதிகளாகினர்.

முழு நாட்டிலும் கொலை செய்யப்பட்ட அனைத்து இனங்களையும் சேர்ந்த பொது மக்களின் எண்ணிக்கை குறிப்பிட முடியாத பெருந்தொகையாகும். நாம் இழந்த சொத்துகளின் பெறுமதி கணக்கிட முடியாதது. எத்தகைய இழப்புகளைச் சந்தித்த போதும், இவைகள் பற்றி ஒரு வசனம் கூட நிபுணர் குழு அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

எனவே, இவ்வறிக்கையை தயாரித்தவர்களது புத்தி சாதுர்யம் சந்தேகத்திற்கு இடமானது என்றும் அவர் அங்கு தெரிவித்தார். தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எரிக் வீரவர்தன ஆகியோரும் இங்கு உரையாற்றினர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.